Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 50

பக்கங்கள் 12

சுடர் : 38
கதிர் : 40

வியாழக்கிழமை 05 ஜனவரி 2023

மார்கழி 21 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2053

## உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வேட்பு மனுத் திகதி அறிவிப்பு

கொழும்பு, ஜன.5
உத்தேச உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

»11

## உள்ளூராட்சித் தேர்தல் ரணில் நடுநிலைமை

கொழும்பு, ஜன.5
உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பரப்புரை நடவடிக்கையில் ஈடுபடாமல், நடுநிலை வகிப்பதற்கு ஜனாதிபதியும், ஐக்கிய தேசியக் கட்சி தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார்.

»11

## கூட்டமைப்பு - ரணில் இன்று மீளச் சந்திப்பு!

கொழும்பு, டிசெ.5
தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையே இன்று சந்திப்பு ஒன்று நடைபெறவுள்ளது. இந்தச் சந்திப்பு மாலை 5 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறும் என்று அறியமுடிகின்றது.
அரசாங்கத்துக்கும், தமிழ்க் கட்சிகளுக்கும் இடையே நடைபெறவுள்ள பேச்சுகளுக்கான நிகழ்ச்சி நிரல் தயாரிப்புக்காகவே இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளது.

»11

# இனப்பிரச்சினைக்கான தீர்வு: ஒருபோதும் நாம் எதிர்க்கோம்!

### வீடு தேடிச் சென்று சம்பந்தனுக்கு உறுதியளித்தார் மஹிந்த



கொழும்பு, ஜனவரி 5
தமிழ் மக்களுக்குத் தீர்வு வழங்கக்கூடாது என்ற எதிர்ப்பு நிலைப்பாட்டில் ஒருபோதும் நாம் இல்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தயாரிக்கும் தீர்வு வரைவு எமக்கு இன்னமும் கிடைக்கவில்லை. அது எமக்குக் கிடைத்ததும் அது தொடர்பில் சாதகமாகப் பரிசீலிப்போம். தற்போதைய தீர்வு முயற்சியை நாம் கடும் போக்குடன் அணுகமாட்டோம்.

»11

## தபால்மூல வாக்களிப்புக்கு விண்ணப்பத் திகதி அறிவிப்பு

கொழும்பு, ஜன.5
உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் அறிவிப்பு வெளியாகியுள்ள நிலையில் தேர்தலில் தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.
எதிர்வரும் 5ஆம் திகதி முதல் எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவுவரை தகுதியான வாக்காளர்களிடமிருந்து தபால்

»08

## விபத்தில் படுகாயமடைந்தவர் சிகிச்சை பயனின்றி உயிரிழப்பு



கிளிநொச்சி, ஜன.5
விபத்தில் சிக்கிப் படுகாயமடைந்து சிகிச்சைபெற்று வந்த ஒருவர் சிகிச்சை பயனின்றி நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்துள்ளார்.
கடந்த திங்கட்கிழமை வடமராட்சி கிழக்கு,

»12

## கிணற்றில் தவறி வீழ்ந்து ஒருவர் சாவு!

சாவ., ஜன.5
தோட்டக் கிணற்றில் தவறி வீழ்ந்து ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் சாவகச்சேரி, மந்துவிலில் நேற்று நடந்துள்ளது.

»11

### மாநகரசபை விவகாரம்:

## சமரசத்துக்கு ஆளுநர் அழைப்பு நிராகரித்தது கூட்டமைப்பு

யாழ்ப்பாணம், ஜன.5
யாழ்ப்பாணம் மாநகரசபையில் ஏற்பட்டுள்ள நிலைமைகளை இணக்கப்பாட்டுடன் முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் வடக்கு மாகாண ஆளுநரின் அறிவுறுத்தலுக்கமைய ஆளுநரின் செயலாளரால் அழைப்பு விடுக்கப்பட்ட கூட்டத்தில் பங்குபற்றப் போவதில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாநகரசபை உறுப்பினர்கள் தெரிவித்தனர்.
யாழ். மாநகரசபையின் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் 7 மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது.

»11

## வயோதிபத் தம்பதியை தாக்கி நகைகள், பணம் கொள்ளை!

### ஒட்டுசுட்டானில் சம்பவம்

கிளிநொச்சி, ஜன.5
முல்லைத்தீவு, ஒட்டுசுட்டானில் வயோதிபத் தம்பதியைத் தாக்கி பணம் மற்றும் நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் நடந்துள்ளது.

»11

## கைதி மரணம்

வவுனியா, ஜன.5
வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் நேற்று மாலை உயிரிழந்தார்.

»11

### பிராந்திய சுகாதாரத் திணைக்களங்களுக்கு

## திட்டங்கள் தயாரித்த பின்னர் நிதி ஒதுக்கீடுகளில் வெட்டு!

யாழ்ப்பாணம், ஜன. 5
உலக வங்கியின் நிதியுதவியில் முன்னெடுக்கப்படும் திட்டத்துக்குரிய, வேலைத்திட்டங்கள் தயாரிக்கப்பட்ட பின்னர் திடீரென அவை வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளரால் வெட்டிக் குறைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.
உலக வங்கியால் கிராமிய சுகாதார மேம்பாட்டை நோக்கமாகக் கொண்டு 5 ஆண்டுகளுக்கு

»11

## அரசியல் தீர்வு முயற்சிகளை ஐ.நா.வுக்கு விளக்கிய ரணில்

கொழும்பு, ஜன.5
இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை காண்பது தொடர்பில் தனது ஆட்சியின் கீழ் முன்னெடுக்கப்படும் நகர்வுகள் தொடர்பாக ஐ.நா. பிரதிநிதிகளுக்கு ஜனாதிபதி



»11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நட்டத்தில் இயங்குகின்ற நிறுவனங்களுக்கு ஏன் போனஸ்?

## விளக்கம் கேட்கிறார் ஜனாதிபதி



கொழும்பு, ஜன. 5

நட்டத்தில் இயங்கும் கூட்டுத்தாபனங்கள் மற்றும் நிறுவனங்களுக்கு போனஸ் வழங்க வேண்டாம் என நிதியமைச்சு அறிவித்திருந்த போதிலும் சுற்றறிக்கைகளுக்கு மாறாக போனஸ் வழங்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தனது ஊழியர்களுக்கு இரண்டு மாத சம்பளத்தையும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் தனது ஊழியர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயையும் போனஸாக வழங்கியுள்ளன என்று ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடம் எவ்வாறு போனஸ் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விளக்கம் கோரியுள்ளார்.

சிறிலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனம் போனஸுக்காக 58 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம)

கஞ்சிபான இம்ரான் விவகாரம்

# புலனாய்வுத் துறை மீது கடுமையான அதிருப்தி

அமைச்சர் பந்துல வெளிப்படை

கொழும்பு, ஜன. 5

பாதாள உலகக்குழுவின் செயற்பாட்டாளர் கஞ்சிப்பான இம்ரான் ராமேஸ்வரத்தில் பதுங்கியிருப்பதாக வெளியான தகவலை அடுத்து, இலங்கையின் புலனாய்வுத்துறை தொடர்பில் கடும் அதிருப்தி ஏற்பட்டுள்ளது என்று அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

கஞ்சிபான இம்ரான் இலங்கையை விட்டுத் தப்பிச் சென்றது அவதானம் மிக்க நிலையாகும். முன்னதாக உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பின்னர் இலங்கையின் புலனாய்வு வலைப்பின்னல் குறித்த அவதான நிலை எழுப்பப்பட்டது. தற்போது அதன் தொடர்ச்சியாக இந்த விடயம் பேசுபொருளாகியுள்ளது என்று பந்துல மேலும் தெரிவித்தார்.

கடந்த மாதம் 25ஆம் திகதியன்று ராமநாதபுரம் மாவட்டக் கடற்கரையோரத்தில் இறங்கியதாக கூறப்படும், கஞ்சிபான இம்ரான் மற்றும் அவரது நண்பர் ஆகியோரை தேடுமாறு தமிழக உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது. கொலைகள், குற்றங்கள், மிரட்டல் உள்ளிட்ட பல்வேறு குற்றங்களுக்காக இலங்கை அதிகாரிகளால் தேடப்படும் இம்ரான், 2019ஆம் ஆண்டு டுபாயில் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டார். விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அவர் அண்மையில் 5 மில்லியன் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டார். இந்த நிலையிலேயே அவர் மாறுவேடத்தில் இந்தியாவுக்கு தப்பிச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# சீனாவுடன் மிக விரைவில்! சுதந்திர வர்த்தக ஒப்பந்தம்

கொழும்பு, ஜன. 5

நாட்டில் நிலவும் டொலர் நெருக்கடிக்கு ஏதேனுமொரு வகையில் தீர்வு காணப்படாவிட்டால் இறக்குமதி நடவடிக்கைகள் பாதிக்கப்படும். இந்த பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காண்பதற்கான சிறந்த வழி இயன்றவரை பல்வேறு நாடுகளுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவதாகும். சீனாவுடன் விரைவில் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதே அரசாங்கத்தின் இலக்காகும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்றுமுன்தினம் இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் தற்போது காணப்படும் பெரும் பிரச்சினை டொலர் நெருக்கடியாகும். இதன் காரணமாக எம்மால் வெளிநாட்டு கடன் மற்றும் வட்டியை செலுத்த முடியாத நிலைமை காணப்படுகிறது. சுதந்திரத்தின் பின்னரான 74 ஆண்டுகளில் மிகவும் தீர்க்கமான கால கட்டத்திலேயே நாம் தற்போது இருக்கின்றோம். அத்தோடு சர்வதேச மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களான மோடி மற்றும் பிட்ச் ரேட்டிங் என்பவற்றின் தரப்படுத்தலில் இலங்கை தொடர்ந்தும் பின்தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இதற்கு அரசியல் ரீதியில் எந்தவொரு தீர்வையும் வழங்க முடியாது. எம்மால் விடுக்கப்படும் கடன் சான்று பத்திரங்களை ஏனைய நாடுகள் ஏற்றுக் கொள்ளாவிட்டால் அது பெரும் நெருக்கடியை தோற்றுவிக்கும். யார் ஆட்சி செய்தாலும், எந்தளவு அவசியமான பொருள்களாகக் காணப்பட்டாலும் இறக்குமதி செய்ய முடியாத நிலைமை ஏற்படும். எம்மிடம் கையிருப்பில் உள்ள டொலர் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டே இறக்குமதி தொடர்பில் தீர்மானிக்க முடியும்.

எனவே இந்த நெருக்கடிக்கான தீர்வாக துரிதமாக டொலர் இருப்பினை அதிகரித்துக் கொள்ள வேண்டும். இதற்கு வேறு எந்த அரசியல் தீர்வும் கிடையாது. எரிபொருள், உரம், இரசாயன பொருள்கள், மருந்து வகைகள், தொழிற்துறைக்கான மூலப்பொருள்கள் உள்ளிட்டவற்றை இறக்குமதி செய்து கொள்வதற்கான தேவை தற்போது காணப்படுகிறது.

எனவே கடன் மறுசீரமைப்புடன் ஏதேனுமொரு வகையில் டொலர் கையிருப்பை அதிகரித்துக் கொள்ளாவிட்டால், எமது நாடு மோசமான நிலைமைக்கு தள்ளப்படும். மத்திய வங்கி, நிதி அமைச்சு உள்ளிட்ட அரச நிறுவனங்கள் கடன் மறுசீரமைப்புக்களுக்கான பொறுப்புக்களை வழங்கியுள்ள சர்வதேச நிறுவனங்களும் இதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றன - என்றார். (ம)

# ஓய்வு வயதெல்லை விவகாரத்தால் அத்தியாவசியத் துறைகள் முடக்கம்

கொழும்பு, ஜன. 5

ஓய்வூதிய விவகாரத்தால் நாட்டில் அத்தியாவசியத் துறைகள் பல முடங்கியுள்ளமையால் விசேட துறைகளிலுள்ள அரச ஊழியர்களின் ஓய்வூதியம் பெறும் வயதை 65 ஆக அதிகரிப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது. கடந்த வருடம் டிசெம்பர் மாதத்துடன் 30 ஆயிரம் அரச ஊழியர்கள் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளனர்.

ரயில்வே திணைக்களத்தில் இருந்து 500க்கும் மேற்பட்ட ஊழியர்கள் ஒரே தடவையில் ஓய்வுபெற்றனர். இந்த ஆளணிப் பற்றாக்குறையால் 100க்கும் அதிகமான ரயில் சேவைகள் இரத்துச் செய்யப்பட்டன.

ஏற்கெனவே ஊழியர் பற்றாக்குறையை எதிர்கொண்டுள்ள ரயில்வே திணைக்களம் திடீரென அதிகளவான ஊழியர்கள் ஓய்வுபெற்றமையால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது என திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை அரச ஊழியர்களின் கட்டாய ஓய்வு வயதை 60 ஆக குறைத்து வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் இருந்து மருத்துவர்கள் மற்றும் விசேட மருத்துவ ஆலோசகர்களை உள்ளடங்குவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்த விடயங்களைக் கருத்திற்கொண்டு விசேட மருத்துவ நிபுணர்கள், தாதியர்கள் மற்றும் ரயில் சாரதிகள் உள்ளிட்ட விசேட அரச ஊழியர்களின் ஓய்வூதியக் காலத்தை அதிகரிப்பதற்கு பொதுநிர்வாக அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது என அரச தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-இ)

# வாகன விபத்தில் முதியவர் சாவு!

யாழ்ப்பாணம், ஜன. 5

வாகன விபத்தில் முதியவர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்

இந்த விபத்துச் சம்பவம் கோப்பாய் சந்திக்கு அருகில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

வீதியால் சைக்கிளில் சென்ற முதியவரை பின்னால் சென்ற பட்டா வாகனம் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது. கோப்பாய் வடக்கை சேர்ந்த சி.நடேசபிள்ளை (வயது- 75) என்பவரே சம்பவ இடத்தில் உயிரிழந்தார்.

விபத்தை ஏற்படுத்திய சாரதி தப்பியோடிய நிலையில் அவரை கைதுசெய்வதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-17)

# மருத்துவ நெருக்கடியைக் கண்டித்து மூங்கிலாறில் நேற்றுப் போராட்டம்!



முல்லைத்தீவு - மூங்கிலாறு பிரதேச மருத்துவமனையில் நிலவும் மருத்துவர்கள் பற்றாக்குறை மற்றும் மருத்துவ நெருக்கடியைக் கண்டித்தும், உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியும் அந்தப் பகுதி மக்கள் மருத்துவமனைக்கு முன்பாக நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் மருத்துவ சேவையைப் பெற்றுக்கொள்ளும் மருத்துவமனையாக மூங்கிலாறு பிரதேச மருத்துவமனை காணப்படுகின்றது. இந்த மருத்துவமனையில் பல்வேறு மருத்துவ நெருக்கடிகள் காணப்படுகின்றன. இதை உடன் சீர்செய்யாவிட்டால், 15 கிலோமீற்றர் தூரத்துக்கு சுற்றியே அடுத்த மருத்துவமனைக்கு செல்ல வேண்டியுள்ளது. சிறுவர்கள், பெண்கள், கர்ப்பிணிகள் இந்த மருத்துவ இடர்பாட்டால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, இங்குள்ள மக்களின் மருத்துவத் தேவையைக் கருத்திற்கொண்டு இந்த மருத்துவமனை உரிய வகையில் செயற்படுவதற்கு ஆவன புரியவேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் வலியுறுத்தினர். (ம-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# யாழ்ப்பாணம் - கொழும்பு 33 பஸ்கள் சேவையில்

## ரயில் சேவை இடைநிறுத்தத்துக்கு மாற்று

யாழ்ப்பாணம், ஜன. 5

யாழ்ப்பாணம் கொழும்பு பேருந்து சேவையில் மேலதிகமாக 33 பேருந்துகள் ஈடுபடுத்தப்படவுள்ளன. கொழும்பு யாழ்ப்பாணத்துக்கான ரயில் சேவை இன்று முதல் இடைநிறுத்தப்படவுள்ளமையை முன்னிட்டு மாற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு வடக்கு மாகாண வீதி பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் ரவீந்திரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொழும்பு - யாழ்ப்பாணத்துக்கான ரயில் சேவை இன்று முதல் இடைநிறுத்தப்படுகிறது..

வவுனியா - அனுராதபுரம் வீதி திருத்தப் பணிகளுக்காக புகையிரத சேவை இடைநிறுத்தப்படுகிறது. இதற்கு குறைந்தது ஆறு மாதங்களாயினும் எடுக்கும்.

அதன்பிரகாரம் மக்களின் சிரமமின்றிய போக்குவரத்துக்கு வடக்கு ஆளுநர், வீதி பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையினர், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினர்; புகையிரத திணைக்களத்தினர் ஆகியோரால் சில மாற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்திலிருந்து முறிகண்டி வரை தற்போது செல்லும் யாழ்.ராணி ரயிலை வவுனியா வரை செல்வதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

வவுனியாவிலிருந்து அநுராதபுரம் சென்று ரயிலில் கொழும்பு செல்ல விரும்புவோருக்காக வவுனியா அநுராதபுரத்துக்கு 20 பேருந்துகள் மேலதிகமாக சேவையில் ஈடுபடவுள்ளன.

தனியார் போக்குவரத்து சேவை மற்றும் இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்துகள் அந்தந்த மாவட்டத்திலிருந்து நேரடியாக அநுராதபுரத்துக்கு சென்று அங்கே பயணிகள் செல்லக்கூடியவாறு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

நேரடியாக பேருந்துகளிலே கொழும்புக்கு செல்லக்கூடியவாறான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தற்பொழுது 38 பேருந்துகள் யாழ்ப்பாணத்தில் இருந்து நேரடியாக கொழும்புக்கு சேவையில் ஈடுபடுகின்றன. அவற்றைவிட மேலதிகமாக 33 குளிரூட்டப்பட்ட பேருந்துகள் உள்ளன. அவை கடந்த கால கொரோனா மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக சேவையில் ஈடுபடுத்தப்படவில்லை.

இந்தநிலையில் தற்போது அவற்றை மீண்டும் சேவையில் ஈடுபடுத்துமாறு கோரப்பட்டுள்ளது. இதன்பிரகாரம் யாழ்ப்பாணம் - கொழும்பு பயணிகளின் போக்குவரத்து நெருக்கடியை தவிர்க்கலாம்- என்றார். (ச-20)

## தென்னிந்தியத் திருச்சபையின் பேராயரின் வரவேற்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன. 5

தென்னிந்தியத் திருச்சபையின் யாழ். ஆதீனத்தின் 5ஆவது பேராயராக கடமைகளைப் பொறுப்பேற்ற பேரருட்பணி வே. பத்மதயாளனை வரவேற்கும் நிகழ்வு வட்டுக்கோட்டை தென்னிந்தியத் திருச்சபை தேவாலயத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் சம்பிரதாய செயற்பாடுகள், வழிபாடுகள், பேராயர்களின் உரைகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து புதிய பேராயரைக் கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் பேராயர்கள், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், நல்லை ஆதீன குருமுதல்வர், யாழ். ஆயர், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் சிறீசற்குணராஜா, தென்னிந்திய திருச்சபை நிர்வாகத்தினர் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஒ-14,27)

## கோழிகள் திருட்டு: இளைஞர் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 5

கோழிப்பண்ணை ஒன்றில் கோழிகளைத் திருடிய இளைஞர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். புத்தூர் கிழக்குப் பகுதியில் உள்ள கோழிப்பண்ணை ஒன்றில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு நுழைந்து 10 கோழிகளை நபரொருவர் திருடியுள்ளார் என்று அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

முறைப்பாட்டுக்கமைய விசாரணைகளை முன்னெடுத்த அச்சுவேலி குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார், கோழிகள் திருடிய குற்றச்சாட்டில் புத்தூர் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞரை நேற்றுப் புதன்கிழமை கைது செய்தனர். இது தொடர்பிலான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-14,20)



## விவசாயப் பணிப்பாளராக முதற்தடவை தமிழ் பெண் நியமனம்

கொழும்பு, ஜன. 5

விவசாய திணைக்களத்துக்கு முதற்தடவையாக பெண்ணொருவர் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு ஆரையம்பதியை சேர்ந்த பரசுராமன் மாலதி என்பவரே நியமனம் பெற்றுள்ளார். கடந்த 2 ஆம் திகதி அவர் தனது கடமைகளை பொறுப்பேற்றார். (ச-இ)

## வவுனியாவில் இதுவரை 8 டெங்கு நோயாளர்கள்

வவுனியா, ஜன. 5

வவுனியா மாவட்டத்தில் இதுவரை 8 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்று வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை தெரிவித்துள்ளது.

நாட்டில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில் வவுனியா மாவட்டத்தில் ஏற்கனவே கடந்த மாதம் 7 பேர் டெங்கு நோயாளர்களாக இனங்காணப்பட்டனர். மேலும் ஒருவர் இந்த மாதம் முதலாம் வாரத்திலேயே இனங்காணப்பட்டுள்ளார். இதனடிப்படையில், வவுனியா மாவட்டத்தில் இதுவரை 8 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதில் 3 பேர் உக்குளாங்குளம் கிராமத்தில் மட்டும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தற்போது அடையாளம் காணப்பட்ட இளைஞர் வவுனியா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார் என்று சுகாதாரப் பணிமனை தெரிவித்துள்ளது. எனினும் இதுவரை இளைஞனின் வீட்டுக்குச் சென்று சுகாதார பரிசோதகர்கள் சோதனையிடவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (ஒ-14,18)

## சடலத்தை பொறுப்பேற்கவும்

யாழ்ப்பாணம், ஜன.5

உரிமை கோரப்படாத சடலத்தை அடையாளம் காட்டி உரியவர்களை பொறுப்பேற்றுக் கொள்ளுமாறு யாழ். போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் சி.எஸ்.யமுனானந்தா கேட்டுக் கொண்டுள்ளார்.

கடந்த 30ஆம்திகதி விடுதி இல.9 இல் இறந்த தாழ்வுப்பாடு வீதி, எமில்நகர், மன்னாரைச் சேர்ந்த சங்கரன் ஜெயராசா (வயது-74) என்பவரின் சடலத்தையே பொறுப்பேற்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ய)

## கடற்படை முகாமுக்குள் யானை புகுந்து தாக்குதல்

### சிப்பாய் சாவு

மன்னார், ஜன. 5

மன்னார் - முசலி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள முள்ளிக்குளம் கடற்படை முகாமுக்குள் யானை புகுந்து தாக்கியதில் கடமையிலிருந்த கடற்படைச் சிப்பாய் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த கடற்படைச் சிப்பாய் பொல் பித்திகம மெலியா பிரதேசத்தைச் சேர்ந்த ஆர்.எம்.எஸ்.பி.ரத்நாயக்க (வயது -41) என அடையாளம் காணப்பட்டுள்ளார் என சிலாபத்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என சிலாபத்துறை பொலிஸார் தெரிவித்தனர். (ச-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமுர்த்திப் பயனாளிகளுக்கு மரக்கறி விதை விநியோகம்

சாவகச்சேரி, ஜன. 5

தென்மராட்சி பிரதேசத்தில் கிராம அலுவலர் பிரிவுகளில் தெரிவுசெய்யப்பட்ட பயனாளர்களுக்கு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை முதல் மரக்கறி விதைகள் விநியோகிக்கப்படுகின்றன.

சமுர்த்தி திணைக்களத்தின் உணவு பாதுகாப்பு மற்றும் போசனையை இலக்கிட்ட வீட்டுத்தோட்ட அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் இந்த மரக்கறி விதைகள் வழங்கப்படுகின்றன.

இராமாவில், கரம்பைக்குறிச்சி, மந்துவில் வடக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் தெரிவுசெய்யப்பட்ட சமுர்த்திப் பயனாளர்களுக்கே நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டது.

விவசாய போதனாசிரியர் மூலம் திட்டத்தின் பயன்பாடு தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டு அவை வழங்கப்பட்டன. (ச-9)

*104 மியான்மர் அகதிகளை*

# கடத்த முயற்சித்தவருக்கு விளக்கமறியல் நீடிப்பு!

யாழ்.வடமராட்சி கடற்பரப்பில் அண்மையில் மீட்கப்பட்ட மியான்மர் அகதிகள் 104 பேரை ஆள்கடத்த முயற்சித்த நபரை எதிர்வரும் 16ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மியான்மரிலிருந்து விரட்டப்பட்டு பங்களாதேஷ் அகதி முகாமில் தங்கியிருந்த ரோஹிங்கிய முஸ்லிம்கள் 104 பேர் அங்கிருந்து இந்தோனேசியாவுக்கு தப்பிச் செல்ல முற்பட்டவேளை படகு பழுதடைந்து தத்தளித்த நிலையில் கடந்த மாதம் யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு கடற்பகுதியில் மீட்கப்பட்டனர்.

அத்துடன் அவர்களை வழிநடத்த முற்பட்டு வலையமைப்புக்கு உதவிய ஒருவரும் அவர்களுடன் மீட்கப்பட்டார். அவருக்கு எதிராக காங்கேசன்துறை பொலிஸார், மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்தனர்.

கடந்த 19ஆம் திகதி 105 பேரும் தடுத்து வைக்கப்பட்ட இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்ட மல்லாகம் நீதிமன்ற நீதிவான் காயத்திரி சைலவன், அகதிகள் 104 பேரையும் மிரிஹான தடுப்பு முகாமுக்கு மாற்றுமாறும் அவர்களை கடத்த முயற்சித்தவரை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டார்.

இந்தநிலையில் இந்த வழக்கு விசாரணை கடந்த திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போதே ஆட்கடத்த முயற்சித்தவரை எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீடித்து நீதிவான் உத்தரவிட்டார். (ச-20)


## வீடு வாடகைக்குத் தேவை

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட பகுதியில் 2 அல்லது 3 அறைகளுடன் வாகனம் தரித்து நிற்கக்கூடிய நிலத்துடன் கூடிய வீடு 2 வருட வாடகைக்குத் தேவை.

தொடர்புகளுக்கு:

**071 4754139 / 071 480 4891**

## சுண்டிக்குளி மகளிர் கல்லூரி
### தரம்-6 இற்கான அனுமதி - 2023

- விண்ணப்பப்படிவங்களை எமது கல்லூரியில் பெற்றுக்கொள்ளலாம்.
- எமது விண்ணப்பப்படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.
- விண்ணப்பப்படிவங்கள் ஏற்கப்படும் இறுதிநாள் 11.01.2023 அத்திகதிக்கு பின்னர் எமக்கு கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படமாட்டா.
- விண்ணப்பப்படிவங்கை பாடசாலை நாட்களில் காலை 8.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணி வரை எமது கல்லூரியில் பெற்றுக்கொள்ளலாம்.
- ஒரு படிவத்திற்கானதும் பரீட்சைக்கானதுமான கட்டணம் 2000/=.

**வயதெல்லை:-**

- தரம் 6 விண்ணப்பதாரி 01.02.2012 இல் அல்லது அதற்கு பின்னர் பிறந்திருக்க வேண்டும்.

அதிபர்.

## மணிவிழா நாயகனை பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது வித்தியாலயத்தில் அரும்பணியாற்றி அகவை அறுபதை நிறைவு செய்து (05.01.2023 சேவையிலிருந்து ஓய்வுபெறும்

**அதிபர் உயர்திரு.**

**காசிநாதர் குணசிங்கம்**

அவர்கள் தனது ஓய்வுக் காலத்தில் புகழோடும், மகிழ்வோடும் எல்லா நலன்களும் பெற்று நீடூழி வாழ அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*Congratulations*

**சேவைக்காலம்:**

- 17.08.1988 - 06.04.2003 - ஆசிரியர், அதிபர். யா/ போக்கட்டி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை
- 07.04.2003 - 14.10.2003 - அதிபர். யா/ நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலயம்
- 15.10.2003 - 31.12.2008 - அதிபர். யா/ குடமியன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை
- 01.01.2009 - 14.08.2012 - அதிபர். யா/ மட்டுவில தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்
- 15.08.2012 - 26.10.2014 - அதிபர். யா/ கொடிகாமம் அரசினர் வித்தியாலயம்
- 27.10.2014 - 04.01.2023 - அதிபர். யா/ கச்சாய் மகாவித்தியாலயம்

**வாழ்த்துவோர்:**

**ஆசிரியர் நலன்புரி சங்கம்**

**யா/ கச்சாய் மகாவித்தியாலயம்.**

## வேலையாட்கள் தேவை

ஊர்காவற்றுறையில் உள்ள பலசரக்குக் கடைக்கு அனுபவம் உள்ள வேலையாட்கள் தேவை.

* ஆரம்ப சம்பளம் 75,000/=
* சிட்டை எழுதுநர் 45,000/=
* வருடம் தோறும் 10,000/= ரூபா சம்பள உயர்வு
* EPF, ETF வழங்கப்படும்.
* ஞாயிறு விடுமுறை நாள்
* அனுபவம் இல்லாதவர்கள் தொடர்பு கொள்ள வேண்டாம்.
* நேர்முகத் தேர்வு நடைபெறும்.

**077 067 4452**


## மரண அறிவித்தல்

மலர்வு 06 . 06 . 1940



உதிர்வு 04 . 01 . 2023

### திருமதி தர்மபூபதி மகாலிங்கம்

தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தர்மபூபதி மகாலிங்கம் அவர்கள் நேற்று (04.01.2023) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு பொன்னாச்சிப்பிள்ளை ஆகியோரின் ஏகப் புத்திரியும், காலஞ்சென்ற கந்தையா செல்லாச்சிப்பிள்ளை ஆகியோரது அன்பு மருமகளும், காலஞ்சென்ற கந்தையா மகாலிங்கத்தின் (ஓய்வு பெற்ற தபால் விநியோகஸ்தர்) அன்பு மனைவியும், அமரர்களான மு.கதிர்காமநாதன், மு.அரிஅரதாசன், மு.சமதர்மராசா மற்றும் மு.ஶ்ரீதரன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ப.புஷ்பராணி (ஓய்வுநிலை அதிபர், யா/வட்டு மத்திய கல்லூரி), ம.புஷ்பவண்ணன் (அவுஸ்திரேலியா), ம.மணிவண்ணன் (இந்தியா), ம.கோபாலண்ணல் ஆகியோரின் அன்புத் தாயாரும், R.S.பஞ்சாட்சரம், பு.யசோதா (அவுஸ்திரேலியா), ம.மிருணாள் (இந்தியா), கோ.தேவகி ஆகியோரின் அன்பு மாமியாரும் பு.அர்ஜீன் (அவுஸ்திரேலியா-பொறியியலாளர்), பு.அருந்தா (அவுஸ்திரேலியா - சட்டக்கல்லூரி மாணவி), ம.அனுஷ்கா (இந்தியா), ம.இஷித்தா (இந்தியா), கோ.பிரகாஷினி (ஆசிரியை, கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி), கோ.அச்சுதன் (தொழில்நுட்ப பொறியியற்பீடம், ஶ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்), கோ.கீர்த்தி (மென்பொருள் பொறியியல் முதலாம் ஆண்டு மாணவி) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.01.2023) வியாழக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மதியம் 12.00 மணியளவில் தகனக்கிரியைக்காக வட்டுக்கோட்டை வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**15, கள்ளி வீதி, வட்டு கிழக்கு, வட்டுக்கோட்டை.**

**தகவல்: குடும்பத்தினர்.**

(CR 38…)

## மரண அறிவித்தல்

தோற்றம் 03 . 01 . 1938



மறைவு 04 . 01 . 2023

### திருமதி பாக்கியலட்சுமி சுப்பிரமணியம்

இல.424/1/1, கில்னர் ஒழுங்கையை சேர்ந்த பாக்கியலட்சுமி சுப்பிரமணியம் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற நில அளவை அத்தியட்சகர்) அவர்களின் அன்பு மனைவியும், அமரர் தனபாலன் (பாபு, பாபுஜி), சந்திரகாந்தன் (காந்தன்-ஜேர்மனி), சிறீகாந்தன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - வட மாகாண சுகாதார சேவை திணைக்களம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெயசந்திரா (சுதா), சேது ஆகியோரின் மாமியும், தர்மிகா, கிறோசன், கம்சிகா, துதீசன், அகிசன் ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான அரியநாயகம், பரமேஸ்வரி நடராஜா, பாலசுப்பிரமணியம், நகுலேஸ்வரி மற்றும் தியாகராசா (ராசன்) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.01.2023) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**424/1/1, கில்னர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.**

**தகவல்: சு.சிறீகாந்தன் (ராஜா) மகன்.**

(CS 22738) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## ஆசைக்கும் தேவைக்கும்...

நாடு பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டாலும், சுகாதாரத்துறை என்றுமே வீழ்ச்சியடையாது என்று தெரிவித்திருக்கின்றார் சுகாதாரத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல. நாட்டில் ஏனைய துறைகளை விட சுகாதாரத்துறையே சிறப்பாகச் செயற்படுகின்றது. அனைத்துச் சவால்களுக்கும் முகங்கொடுத்து வெற்றிகரமாகப் பயணிக்கின்றது என்றும் தனக்குத்தானே புகழ்மாலையும் சூட்டியிருக்கிறார் அவர்.

இலங்கை பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கிய நாள் முதல் இன்று வரையில் மொத்தமாகச் சீர்குலைந்த துறைகளில் சுகாதாரத்துறை முதன்மையானது. கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில் ஆரம்பித்த இந்தப் பின்னடைவு இன்னமும் நிமிர்ந்தபாடில்லை. இன்னும் சொல்லப்போனால், ஒன்றுமாறி இன்னொன்றாக பின்னடைவுகளும், பற்றாக்குறைகளுமே சுகாதாரத் துறையின் கடந்த மூன்றாண்டுகாலப் பயணத்தில் எஞ்சி நிற்கின்றன. கடந்த சில வாரங்களாக நாட்டில் முன்னெப்போதும் இல்லாத மருத்துவ பெருநெருக்கடி ஏற்பட்டிருக்கின்றது. சுகாதாரத்துறை முடங்கும் நிலையைநோக்கிப் பயணப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் ஓர் அமைப்பாகவும் மருத்துவ நிபுணர்கள் தனித்தனியாகவும் அபாய ஒலி எழுப்பிக் கொண்டிருக்கின்றனர். இவ்வாறானதொரு பின்னணியில் – பின்னடைவில், தன் தலைமையிலான சுகாதாரத்துறைக்கு எந்த நம்பிக்கையின் அடிப்படையில், எத்தகைய ஆதாரங்களைக் கொண்டு அமைச்சர் கெஹலிய இப்படி ஒரு புழுகுமூட்டையை அவிழ்த்து விட்டுள்ளார் என்பது புரியவில்லை.

அரச ஊழியர்களின் சம்பளம் மற்றும் ஓய்வூதியங்கள் ஆகியவற்றுக்கு அடுத்தபடியாக சுகாதாரத்துறைக்கே ஜனாதிபதி ரணில் (நிதி அமைச்சராக முன்வைத்த பட்ஜெட்) முன்னுரிமை அளித்துள்ளார் என்று, தான் சார்ந்த துறையின் இன்றியமையாத தன்மையை வைத்து புளகாங்கிதம் அடையவும் அமைச்சர் கெஹலிய தவறவில்லை. பட்ஜெட்டில் சுகாதாரத்துறைக்கு கூடுதல் நிதி ஒதுக்கப்படுகின்றது என்பதற்காக அந்தத் துறை வினைத்திறனாகப் பயணப்படுகின்றது என்று அர்த்தமில்லை. இலங்கையின் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும் பட்ஜெட் டொலரையோ அல்லது ரூபிளையோ அடிப்படையாக வைத்து அல்ல. ரூபாவை முதலாகவும் முடிவாகவும் கொண்டது. இலங்கை அரசாங்கத்துக்குப் பணம் அச்சிடுவது என்பது கைதேர்ந்த கதை. மலைக்கத்தக்க அளவு பணத்தை அச்சிட்ட பின்னர், காகிதக் குப்பையாக அவற்றை அள்ளிக் கொட்டுவார்கள். அவற்றை வைத்து எத்தனைவகையான மருந்துகளை அரசாங்கத்தால் பெற்றுவிடமுடியும்?


மிக விரைவாக ஏற்படலாம் என்று கருதப்படும் மருத்துவப் பேரிடரைத் தவிர்க்குமாறு வலியுறுத்தி நாடெங்கிலும் போராட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள புதிய வரி விதிப்பானது மருத்துவத்துறையை இலக்குவைக்கின்றது என்று தெரிவித்து மருத்துவர்களும், தாதியர்களும் போராட்டங்களை முன்னெடுக்கத் தயாராகியிருக்கின்றனர். இவற்றுக்கெல்லாம் தீர்வாக, மருத்துவச் சேவையை அத்தியாவசியத் தேவையாக அறிவித்து வர்த்தமானியை வெளியிடவே அரசாங்கத்தால் முடிந்தது. மற்றும்படி எந்தவொரு நேர்மறையான நடவடிக்கையையும் அமைச்சர் இதுவரையில் முன்னெடுத்ததாக இல்லை. இவ்வாறிருக்கையில், சுகாதாரத்துறையின் அண்மைக்காலப் போக்கை மெச்சுவதும் ஜனாதிபதிக்கு நற்சான்றிதழ் கொடுப்பதும் கெஹலிய தரப்பினரால் தான் இயலும்.

சிலர் ஆசைக்கும் – தேவைக்கும் – வாழ்வுக்கும் – வசதிக்கும் ஊரார் கால்பிடிப்பார். ஒரு மானம் இல்லை, அதில் ஈனம் இல்லை. அவர் எப்போதும் வால் பிடிப்பார் என்ற தமிழ்த் திரைப்பாடல்தான் கெஹலியவின் நடவடிக்கைகளைப் பார்க்கும்போது ஞாபகத்துக்குத் தோன்றுகின்றது.

### நாளொரு நல்வார்த்தை

"வெற்றிக்கான பாதையில் வேகக்கட்டுப்பாடு எதுவும் இல்லை"

– டேவிட் டபிள்யூ. ஜான்சன்




## தேர்தலைப் பிற்போட்டால் போராட்டங்கள் தீவிரமடையும்

கொழும்பு, ஜன. 5

உள்ளூராட்சிசபைத் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு முடிவெடுத்துள்ள நிலையில், ஏதாவது தந்திரோபாயத்தைப் பயன்படுத்தித் தேர்தலை ஒத்திப்போடுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்தால் அதற்கு எதிராக பெரியளவில் இரண்டு கட்டங்களாகப் போராட்டங்களை முன்னெடுப்பதற்கு எதிர்க்கட்சிகள் முடிவெடுத்துள்ளன.

இந்த இரு போராட்டங்களில் ஒன்று நீதிமன்றத்தில் முன்னெடுக்கப்படும் சட்டப்போராட்டமாகவும், மற்றையது மக்கள் போராட்டமாகவும் அமையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நீதிமன்றத்தில் முன்னெடுக்கப்படும் சட்டப் போராட்டத்தில் வரலாற்றில் என்றுமில்லாத அளவுக்கு சட்டத்தரணிகள் முன்னிலையாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மக்கள் போராட்டங்களை நாடளாவிய ரீதியில் தீவிரமாக முன்னெடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது. (ம)

## அரசின் இயலாமையை மறைக்க போராட்டக்காரர்கள் மீது அவதூறு

கொழும்பு, ஜன. 5

அரசின் இயலாமையை மறைப்பதற்காகவும் தோல்வியை மூடி மறைப்பதற்காகவும் போராட்டச் செயற்பாட்டாளர்களுக்கு எதிராக அவதூறுப் பரப்புரைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் வசந்த முதலிகே தெரிவித்துள்ளார்.

பொதுமக்களுக்கு அவர் எழுதியதாகக் கருதப்படும் பகிரங்கக் கடிதத்திலேயே மேற்படி விடயத்தை வலியுறுத்தியுள்ளார்.

வாழ்வதற்கான உரிமையை உறுதிப்படுத்துவதற்காக போராட்டத்தைத் தெரிவு செய்தோம். அதற்காக எந்தவித தியாகத்தையும் செய்வதற்கு மாணவர் இயக்கம் தயாராக உள்ளது. உண்மையான பயங்கரவாதிகள் சுதந்திரமாக உள்ளபோது, பயங்கரவாதியாக முத்திரை குத்தப்பட்ட நான் சிறையில் இருந்த 135ஆவது நாளே இந்த வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதி. சிறந்த சமூகத்துக்காகப்



போராடி, மாற்றத்துக்காகக் கோரிக்கை விடுத்தவர்களும் சிறையிலுள்ளனர். மக்கள் போராட்டத்தின் எதிர்பார்ப்புகள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை - என்றுள்ளது. (ம)

### நாளை


06.01.2023 வெள்ளிக்கிழமை மார்கழி 22

சுபநேரம் : 06.31 - 08.01

ராகுகாலம் : 11.01 - 12.31

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 08.07.1943

இறப்பு 05.01.2015

## அமரர் சிதம்பரப்பிள்ளை கனகசிங்கம்

(நொச்சிமோட்டை, ஓமந்தை, வவுனியா)

அன்பிலே சிறந்தவராய் மண்ணிலே உதித்து
அமைவுற்ற வாழ்வினில் நறுமணம் பரப்பி
இல்லத்தின் விருட்சமாய் உறவுகள் பேணிடும்
கருணை வடிவமாய் உரிமையாய் உணர்வை
அன்பாய் பகிர்ந்தே விண்ணக வாழ்வை நாடியே - சென்றீர்கள்
ஆண்டுகள் எட்டு பறந்தோடிச் சென்றதனால்
என்றென்றும் உங்கள் பாதம் போற்றி பணிந்திடுவோம்.

மனைவி - மலர்மாலை
கனகசிங்கம்.

(CS 48383 ) (3/6)

# நினைவஞ்சலி

13ஆம் ஆண்டு 48ஆம் ஆண்டு



மண்ணில் 03.05.1922 விண்ணில் 05.01.2010



மண்ணில் 16.03.1927 விண்ணில் 22.12.1974

அமரர் கணபதிப்பிள்ளை சபாரத்தினம்

அமரர் கனகாம்பிகை சபாரத்தினம்

தந்தையின் தோள் எனும் அரியாசனமும்
தாயின் மடி தந்த அழகான தொட்டிலும்
இன்றைக்கு இரண்டுமே இல்லாத போதிலும்
அம்மா என்ற அன்பான முதல் மொழியும்
அப்பா தந்த அழியாத முகவரியும்
இன்றுவரை எங்களுக்கு வழிகாட்டும் தீபங்கள்
தன்னலம் இல்லாத அன்னையின் நேசமும்
தன்னிகர் இல்லாத தந்தையின் பாசமும்
ஆண்டுகள் பல ஆனாலும் எம் நினைவில்
நீங்காது நிறைவோடு தினம் தினம் உயிர்த்திருக்கும்

இல.5, கல்லடி வீதி,
சாவகச்சேரி.
"திலக வாசம்", தபாலக வீதி,
சாவகச்சேரி

(CR/38945)

குடும்பத்தினர்

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



பிறப்பு 27 . 01 . 1972

இறப்பு 08 . 11 . 2022

## அமரர் பரமநாதன் சத்தியசீலன்

கடந்த 08.11.2022 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் பரமநாதன் சத்தியசீலன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த 07.12.2022 அன்று கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது. அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (06.01.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இடைக்குறிச்சி, வரணி.

(CS/48484)

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## அப்புத்துரை சோமஸ்கந்தராஜா

(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபனம்)

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், மூளாயை வதிவிடமாகவும், யாழ்ப்பாணம் சுண்டுக்குளியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட அப்புத்துரை சோமஸ்கந்தராஜா கடந்த (03.01.2023) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை - நவமணிப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம் - கனகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், மகாலஷ்மியின் பாசமிகு கணவரும், தனேசன் ( HNB, Northern Regional Office ), தர்சிகா ( Commercial Bank, Manipay ) ஆகியோரின் அன்புத் தந்தையும், மெரின் பிரேமிளா ( Srilanka Insurance, Jaffna), கோகுலசங்கர் ( Seylan Bank, Manipay) ஆகியோரின் மாமனாரும், ஈஸ்வரி, ஸ்ரீஸ்கந்தராஜா ( Canada ), யோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ் சென்ற கணேந்திரநாதன், ஜெகதாம்பிகை ( Canada ), சச்சிதானந்தன் ஆகியோரின் மைத்துனரும், விக்னேஸ்வரன் - சாந்திமலர் ( Canada ), கணேஸ்வரன் - செல்வமதி ( மூளாய்), சிவநாதன் - விஜயலக்ஷ்மி (UK), ஸ்ரீகரன் - ராசலஷ்மி (தொட்டிலடி) ஆகியோரின் அன்புச் சகலனும், மெபிஷன், சித்தேஷ், லியனிதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.01.02023) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காகத் துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

No. 07/3, மொறிஸ் லேன்,
கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.


(CS/48449)

தகவல் :
குடும்பத்தினர்.
077 375 2273

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 16 . 04 . 1942



இறப்பு 03 . 01 . 2023

## கனகசிங்கம் சிவசுப்பிரமணியம்
## (மணியம் ஓவசியர்)

துன்னாலை வடக்கு இந்திர அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் துன்னாலை தாமரைக்குளத்தடியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசிங்கம் சிவசுப்பிரமணியம் அவர்கள் நேற்று முன்தினம் (03.01.2023) செவ்வாய்க்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் துன்னாலை வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கனகசிங்கம் சின்னம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான மனுவல் பாக்கியம் தம்பதியரின் பாசமிகு மருமகனும், லில்லிமேரியின் அன்புக் கணவரும், உதயகுமார், சிவகுமார், ஜெயகுமார், சாந்தகுமார், கெலன்குமார், டினிஸ்குமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஆனந்தி, காயத்திரி, அமிர்தா, சிவச்செல்வி, யெனிதா, சியானி ஆகியோரின் நேசத்திற்குரிய மாமனாரும், உமையவன், ஆரண்யா, அஞ்சலிக்கா, யஸ்மிக்கா, விஷால், தர்னேஷ், லிசாயினி, ஜிகாஸ்வினி, அஜய், கசிதா, கனிசா, காசினி, ஆருசன், அகானா ஆகியோரின் பேரனும், துன்னாலையில் வசிக்கும் மாணிக்கம் (சந்தனம்) அவர்களினதும், காலஞ்சென்ற சிவகாமிப்பிள்ளை (பாக்கியம்) அவர்களினதும் சகோதரரும், கனடாவில் வசிக்கும் பொன்ராசாவினதும், காலஞ்சென்றவர்களான தங்கராசா, நேசம்மா, றோஸ்மேரி அவர்களின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (12.01.2023) வியாழக்கிழமை பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளிற்கு :- உதயகுமார் - 0033 605781682
சிவகுமார் - 0044 7450280803
ஜெயகுமார் - 0033 695523127
சாந்தகுமார் - 0033 769147378
கெலன்குமார் - 0033 782277922
டினிஸ்குமார் - 0033 78218942 5

தகவல்:
பிள்ளைகள்.

(CS 22735) 1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாள் தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள
பிரபல ஹோட்டல் ஒன்றுக்குப்
பின்வரும் வேலையாள்கள்
தேவை.

இந்தியன் சமையல்காரர் (Indian Cook)
யாழ்ப்பாண சமையல்காரர் (Jaffna Cook)
சமையலறை சுத்திகரிப்பாளர் (Kitchen Cleaner)

(CS/48450)

**070 716 3756 / 070 746 8567**


## தபால்மூல...

மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்களை தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு கோரியுள்ளது.

எதிர்வரும் 22 ஆம் திகதிக்குப் பின்னர் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதை விண்ணப்பதாரிகள் கருத்திற் கொள்ள வேண்டும் என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தேர்தல் பணிகளில் ஈடுபடும் அரச அதிகாரிகள், சேவையாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், உரிய பிரதேசத்தில் சேவையில் ஈடுபடும் இலங்கை போக்குவரத்துச் சபை அதிகாரிகள், சேவையாளர்கள், தபால் திணைக்கள அதிகாரிகள் மற்றும் சேவையாளர்கள், புகையிரதத் திணைக்கள அதிகாரிகள் மற்றும் சேவையாளர்கள், நாடளாவிய ரீதியில் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடும் முப்படையினர், பொலிஸ் திணைக்களம் மற்றும் சிவில் பாதுகாப்பு தரப்பினர் மற்றும் தேர்தல் நடைபெறும் தினத்தில் வாக்களிக்க முடியாத நிலையில் தேர்தல் நடவடிக்கையில் ஈடுபடும் அரச அதிகாரிகள் தபால் மூலமாக வாக்களிக்கத் தகுதி பெற்றவர்களாகக் கருதப்படுவர். தபால் மூல வாக்களிப்புக்காக வழங்கப்பட்டுள்ள காலத்துக்குள் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

(அ-எ)


## உதவி அர்ச்சகர்கள் தேவை

யாழ்ப்பாணம். இணுவில் கிராமத்தில் உள்ள பிரசித்தி பெற்ற ஆலயம் ஒன்றிற்கு உதவி அர்ச்சகர் தேவை. அவர் ஆசாரமும், நல்ல பழக்க வழக்கமுள்ள அந்தணராகவும் இருத்தல் வேண்டும். ஆறு கால பூசைகள் கிரமமாக நடைபெறும் எமது ஆலயத்தில் முழுநேர பணி செய்யக்கூடியவராகவும். ஆலயத்தின் நித்திய கருமங்களை ஆற்றக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட தகைமை உடையவர்கள் உடனடியாக ஆலயத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப் படுகின்றார்கள்

ஊதியம் பேசித்தீர்மானிக்கப்படும்.

**077 857 6896, 074 253 5145**

(CS 22726)(3/6)



## இலங்கை மின்சாரசபை
## உத்துறு ஜனனி மின்னிலைய வளாகத்தினை சுத்திகரிப்பதற்கான சேவை சம்பந்தமான கேள்விப்பத்திரங்கள்

இலங்கை மின்சாரசபை உத்துறு ஜனனி மின்னிலயத்திற்கு சுத்திகரிப்பு சேவைகள் வழங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன.

கேள்விப்பத்திரங்களை அலுவலக நேரத்தில் பிற்பகல் 3.00 மணிவரை பின்வரும் இடங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

| | |
|---|---|
| **பிரதான பொறியியலாளர்,<br>யாழ் ஒளி மின்நிலையம்,<br>இலங்கை மின்சாரசபை,<br>சுன்னாகம்.<br>தொ.பே.இல. 0212242247/8** | Office of the Deputy General Manager,<br>Ceylon Electricity Board,<br>Generation Head Quarters,<br>New Kelani Bridge Road,<br>Kolonnawa. 10600<br>Telephone No:- 0112 423 897 |

**01. கேள்விப்பத்திர பெறுமதி** (Price of the Bid Document ) **- ரூபா. 3,500.00**

**02. கேள்விப்பத்திர பிணை வைப்பு** (Value of Bid Bond ) **- ரூபா. 50,000.00**

**பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்களை**

Office of the Deputy General Manager,
Ceylon Electricity Board, Generation Head Quarters,
New Kelani Bridge Road, Kolonnawa.
Telephone No:- 0112 423 897

**என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.**

கேள்விப்பத்திரங்கள் 01.02.2023 முற்பகல் 10.00 மணிக்கு Office of the Deputy General Manager, Ceylon Electricity Board, Generation Head Quarters, New Kelani Bridge Road, Kolonnawa என்னும் முகவரியில் அமைந்துள்ள அலுவலகத்தில் திறக்கப்படும்.


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி அழைப்பு



மண்ணில் 26.01.1932

விண்ணில் 06.12.2022

கடந்த 06.12.2022 அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவன்

### அமரர் கதிரித்தம்பி வேலும்மயிலும்

**(ஓய்வுபெற்ற கிராம சேவையாளர்)**

அவர்களின் 31 ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (05.01.2023) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.**

**கந்தபூரண இல்லம்,**
**கோவில் வாசல், இணுவில்.**

(CS/22729)

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



பிறப்பு 13 - 11 - 1965

இறப்பு 31 - 12 - 2022

### திருமதி சிவனடியான் தயாளினி

யாழ். இணுவில் மஞ்சத்தடியைப் பிறப்பிடமாகவும், இணுவில் தெற்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவனடியான் தயாளினி கடந்த (31.12.2022) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாஸ்கரதாஸ் தவமணி தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற சின்னையா செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், சின்னையா சிவனடியான் அவர்களின் பாசமிகு மனைவியும், சிவகுமார், ராஜ்குமார், ஜெயசீலன், சிந்துஜா, சிவதர்சன், கிருசாந்தன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், கவிதா, சர்மிளா, கேதீஸ்வரன், ஹென்சியா ஆகியோரின் பாசமிகு மாமியும், காலஞ்சென்ற திருக்கேதீஸ்வரன், தேவி, நாகேஸ்வரன் (பபி), காஞ்சனகுமாரி, பாலச்சந்திரன், சுபாஜினி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், நாகேஸ்வரன் - விசயா, பாலச்சந்திரன் - வினோதினி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், அக்சயா, அகரன், ஆகாஸ், அஸ்வின், ஆருஸ், இலக்கியன், இனியவன் ஆகியோரின் பாசமிகு பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.01.2023) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இணுவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(CS 22468) (2.6)

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

யாழ். மண்டைதீவு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும்,
யாழ். இல 16, மடம் வீதியை வதிவிடமாகவும் கொண்டிருந்த

### வைத்தி கணபதிப்பிள்ளை

**அவர்களின் 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி.**



தோற்றம் 06.06.1930

மறைவு 05.01.2013

பத்தாண்டு சென்றும் பதறுகிறோம் ஐயா
எம் பலம் குறைந்தது என்று கதறுகிறோம் ஐயா
உம் இழப்பு நடந்த பின்பு எம் உறவுகள்
ஒவ்வொரு இடமாய் சிதறியது ஐயா

நீங்கள் அரசனாய் இருந்த போது நாங்கள்
பயப்படாமல் வாழ்ந்தோம் ஐயா
என் குருவே நீங்கள் தந்த கலையையும்
உம்மையும் என்றும் மறவேன் ஐயா

அன்பு என்றால் என்ன என்பதையும் மற்றவருக்கு
உதவி செய்வதையும் உங்களிடம் கற்றோம் ஐயா,
பாசத்தின் உறைவிடமே நீங்கள்,
எம்மை விட்டு சென்றாலும்
உம் நேசம் என்றும் மறவோம் ஐயா,

உம்மை பிரிந்த வலியை விட இவ் உலகில்
எந்த வலியும் பெரிதில்லை ஐயா,
தண்ணீர் இல்லாத மீன் போல் தவிக்கிறோம் ஐயா,
பாசத்திற்கு ஏங்கும் பிள்ளையாய் பரிதவிக்கிறோம்
ஐயா, எத்தனை ஆண்டானாலும் உங்கள் நினைவு
மாறாது ஐயா,
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்...


**நினைவுடன்:-**
**குடும்பத்தினர்**

(CS/22718)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 05 . 04 . 1959



இறப்பு 04 . 01 . 2023

## தியாகராஜா சௌந்தரராஜா
(ஓய்வுபெற்ற தபாலதிபர்)

பூநகரியை பிறப்பிடமாகவும், உசன் மிருசுவில், வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராஜா சௌந்தரராஜா அவர்கள் நேற்று (04.01.2023) புதன்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தியாகராஜா மற்றும் சிவஞானம் தம்பதியரின் அன்பு மகனும், சுமதி (ஆசிரியர், யா/சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலை) அவர்களின் அன்புக் கணவரும், ஆரூரன் (Manager, SPARC Hub Department of Civil Eng. Monash University), சிவானி (ஆசிரியர், வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), ஜனனி (வவுனியா பல்கலைக்கழக 3ஆம் வருட மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும், யோதீபன் (பொறியியலாளர், நீர்ப்பாசனத் திணைக்களம்), துஜீவா (கணக்காளர், அவுஸ்திரேலியா) ஆகியோரின் மாமனாரும், ஜஸ்விகாவின் பேரனும், காலஞ்சென்ற வர்களான ஸ்ரீஸ்கந்தராஜா, பற்குணராஜா, விக்கினராஜா, கமலா, விமலா மற்றும் மாலா, சாந்தி, திருக்கேதீஸ்வரி, சகுந்தலாதேவி, சண்முகநாதன் இராஜேஸ்வரி ஆகியோரின் சகோதரனும், கலானந்தன் (பிரான்ஸ்), சதானந்தன் (லண்டன்), கோமதி (ஆசிரியர், யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.01.2023) வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் சங்கரத்தையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 3.30 மணியளவில் தகனக்கிரியைக்காக வட்டுக்கோட்டை வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

Dr.செல்லத்துரை வீதி,
சங்கரத்தை, வட்டுக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்.
077 3759 841

(CR 38967) 1/6

# மரண அறிவித்தல்



## விக்கினேஸ்வரன் துவாகரன்

அளவெட்டி வடக்கு அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விக்கினேஸ்வரன் துவாகரன் நேற்று (04.01.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் விக்கினேஸ்வரன் காலஞ்சென்ற கனகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, நாகரத்தினம், சுப்பிரமணியம், இராசம்மா ஆகியோரின் அன்புப் பேரனும், யசோகன் (லண்டன்), கிரிவரன் (பொஸ்வானா), தனுஜன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிந்துஜா (லண்டன்), நிவேதிதா (பொஸ்வானா) ஆகியோரின் மைத்துனனும், காலஞ்சென்ற பரமேஸ்வரன் மற்றும் விஜயரத்தினம், சிவாயினி ஆகியோரின் அன்புப் பெறாமகனும், பத்மநாதன், இராஜேஸ்வரி, கனகசபை ஆகியோரின் மருமகனும், சஸ்பிகன், கவிசனா, சிவகீர்த் ஆகியோரின் பாசமிகு சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.01.2023) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி வடக்கு கேணிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பெத்தாவளை, அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.
077 276 2698

# மரண அறிவித்தல்

பிறப்பு 15 . 02 . 1957



இறப்பு 02 . 01 . 2023

## முத்தையா சத்தியநாதன்

புங்குடுதீவு 6ஆம் வட்டாரம், இறுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வில்லூன்றி பிள்ளையார் கோவிலடி, கொட்டடியை வதிவிடமாகவும் சுவிற்சர்லாந்தில் வாழ்ந்தவருமான முத்தையா சத்தியநாதன் அவர்கள் கடந்த (02.01.2023) திங்கட்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தையா - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும், தம்பிப்பிள்ளை - பறுவதபத்தினி தம்பதிகளின் அன்பு மருமகனும், மனோன்மணியின் பாசமிகு கணவரும், சுரேந்திரன் (சுவிஸ்), தரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுரேந்தினி (சுவிஸ்), றஞ்சிதா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சுறோஜினி (பிரான்ஸ்), விமலா தேவி, சச்சிதானந்ததேவி, தவானந்தன் (லண்டன்), கண்ணன், ஜீவானந்தன் (சுவிஸ்), பிரபா (தேவி படமாடம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆயிஷா, நயன், சவீன், அறோன் ஆகியோரின் அன்புப் பேரனும், தேவராசா (சுவிஸ்), முகுந்த விக்னேஸ்வரி (சுவிஸ்), நித்தியானந்தன், வசந்தேஸ்வரியின் பாசமிகு சம்மந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.01.2023) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
021 222 1312

தகவல்:
குடும்பத்தினர்

(CS 22725) (3/6)

# மரண அறிவித்தல்

## திருமதி உதயகுமார் விசயசெல்வி



மண்ணில் 08.10.1968

விண்ணில் 31.12.2022

யாழ்ப்பாணம் பெரியவிளானை பிறப்பிடமாகவும், நெதர்லாந்து Eindhoven ஐ வதிவிடமாகவும் கொண்ட திருமதி உதயகுமார் விசயசெல்வி அவர்கள் கடந்த (31.12.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விசயரத்தினம் (மனேச்சர்), இராசமணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கதிரவேலுப்பிள்ளை விசாலாட்சி தம்பதியரின் அன்பு மருமகளும், உதயகுமார் அவர்களின் அன்பு மனைவியும், வினோஜன், சாருகன், மாலவிகா ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஐங்கரன், ஜெயச்செல்வி, குகச்செல்வி, உதயச்செல்வி, கலைச்செல்வி ஆகியோரின் அன்புச் சகோதரியும், யசிதா, சிவநேசன், காலஞ்சென்ற இராசலிங்கம், துரைராசசிங்கம், தனேந்திரா மற்றும் செல்வராசா, சிவபாலசுந்தரம், தெய்வேந்திரம், மகேந்திரன், கௌசலாதேவி, இலங்கேஸ்வரி, ரவிச்சந்திரன், சசிகலா, ரதி மாலா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (04.01.2023) புதன்கிழமை நெதர்லாந்தில் குறித்த முகவரியில் நடைபெற்றது.

துயர்பகிர்வு நிகழ்வு யாழ். பெரியவிளானில் அமைந்துள்ள அவரது தாய்மனையில் நடைபெறுகின்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

077 200 7331 இராசமணி (தாய்)
074 11[illegible] 2827 கலைச் செல்வி
076 4951 858 ஜெயச்செல்வி

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 38995) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/ கச்சாய் மகா வித்தியாலயம்

# மணிவிழா வாழ்த்தும் சேவை நயப்பும்

## உயர்திரு. காசிநாதர் குணசிங்கம்

## அதிபர் - தரம் I



**சேவை விபரம்**

- 17.08.1988 - 06.04.2003 ஆசிரியர், அதிபர் - யா/ போக்கட்டி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை
- 07.04.2003 - 14.10.2003 அதிபர், யா/ நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலயம்
- 15.10.2003 - 31.12.2008 அதிபர், யா/குடமியன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை
- 01.01.2009 - 14.08.2012 அதிபர், யா/ மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்
- 15.08.2012 - 26.10.2014 அதிபர், யா/ கொடிகாமம் அரசினர் வித்தியாலயம்
- 27.10.2014 - .04.01.2023 அதிபர், யா/கச்சாய் மகா வித்தியாலயம்

ஆசிரியர் சேவை13 வருடங்கள் அதிபர் சேவை 21 வருடங்கள்

யா/ கச்சாய் மகா வித்தியாலயம்

உயர்திரு. காசிநாதர் குணசிங்கம் S.L.P.S –I

- பிறந்த திகதி - 05.01.1963
- ஆசிரியர் - 17.08.1988
- அதிபர் - 3 - 15.11.2001
- அதிபர் - 2 - 01.07.2008
- அதிபர் - I - 15.11.2010
- ஓய்வு - 05.01.2023

- சேவைக்காலம் : 34 வருடம் 04 மாதம் 18 நாள்
- ஆசிரியர் - 13 வருடங்கள்
- அதிபர் - 21 வருடங்கள்
- சிறந்த அதிபர் விருது 2005 திருகோணமலை VIDYA VIJAYA SRI SAMMANA
- சிறந்த அதிபர் விருது - 2015 - பிரதீபா பிரபா
- சிறந்த அதிபர் விருது - 2017 - குரு பிரதீபா பிரபா
- க.பொ.த. உ/த கலை ஆரம்பம் : - 01.01.2018
- பாடசாலை IC தரம் உயர்வு : - 01.01.2018
- கச்சாய் மகா வித்தியாலயம் பெயர் மாற்றம் : - 04.01.2019

Congratulations!

### ஆசிச் செய்தி




"தாமின் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்"

தாம் இன்புறுவதற்குக் காரணமான கல்வியால் உலகமும் இன்புறுவதைக் கண்டு, கற்றறிந்தவர்கள், மேன்மேலும் தாம் கற்பதையே விரும்புவார்கள் எனும் வள்ளுவர் வாக்கிற்கு அமைவாக அழிவற்ற செல்வமாகிய கல்விப்பணிக்காக தமது வாழ்நாளினை அர்ப்பணித்து இன்றைய நன்நாளில் மணிவிழாக் கண்டு ஓய்வுபெறும் அதிபர் திரு. காசிநாதர் குணசிங்கம் அவர்களை மனதார வாழ்த்துவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

திரு.காசிநாதர் குணசிங்கம் அவர்கள் தமது 34 வருட சேவைக்காலத்திலே 13 வருடங்கள் ஆசிரியராகவும், 21 வருடங்கள் அதிபராகவும் சேவையாற்றியுள்ளார். சிறந்த அதிபருக்கான பல விருதுகளை தமக்கு சொந்தமாக்கியதோடு யாழ்ப்பாணத்தின் பல்வேறு பிரதேசங்களில் தமது சேவையை வழங்கியுள்ளார். 2014 ஆம் ஆண்டில் இருந்து இன்றுவரை தமது பணியை யா/ கச்சாய் மகா வித்தியாலயத்திலே வழங்கி, தமது சேவைக்காலத்திலே பாடசாலையில் பல முன்னேற்றங்களை மேற்கொண்டதோடு நல்ல தேர்ச்சி மட்டங்களை க.பொ.த. உயர்தர பரீட்சையில் காட்டியுள்ளார்.

**சிவஸ்ரீ இ. குமாரசுவாமிக்குருக்கள்,**
**பிரதமகுரு, சுட்டிபுரம் அம்மன் தேவஸ்தானம், வரணி.**

### வாழ்த்துச் செய்தி



யா/ கச்சாய் மகா வித்தியாலய அதிபர் திரு.கா.குணசிங்கம் அவர்களது மணிவிழாவினையொட்டி வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன். இவர் 1988 ஆம் ஆண்டில் ஆசிரியப் பணியினை ஏற்று 2001 ஆம் ஆண்டில் அதிபர் சேவைக்கு உள்வாங்கப்பட்டார். இவர் ஆசிரியராகப் பணியாற்றிய காலத்திலும் அதிபராகப் பணியாற்றிய காலத்திலும் சிறப்பாகத் தனது கடமைகளை ஆற்றி மாணவர்களினது கல்வி வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியுள்ளார் 2005, 2015, 2017 ஆம் ஆண்டுகளில் சிறந்த அதிபருக்கான விருதினைப் பெற்றுக்கொண்டவராவார். தற்போது கடமையாற்றும் பாடசாலையில் க.பொ.த. (உ/த) வகுப்புக்களை ஆரம்பிப்பதற்கும் IC பாடசாலையாக தரமுயர்தப்படுவதற்கும் இவரது பங்களிப்பு அளப்பரியது. இவர் ஆசிரியராகவும், அதிபராகவும் தனது சேவைக் காலத்தில் ஆற்றிய பணிகளுக்கு எனது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதோடு ஓய்வுக்காலம் சிறக்கவும் வாழ்துகின்றேன்.

**திரு.செ. உதயகுமார்**
**ஓய்வுநிலை மாகாணக் கல்விப் பணிப்பாளர், வட மாகாணம்.**

### மணிவிழா நாயகனிற்கு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துரை



எமது வலயத்தினைச் சேர்ந்த யா/ கச்சாய் மகா வித்தியால்ய அதிபர் திரு. காசிநாதர் குணசிங்கம் அவர்களின் மணிவிழாவிற்கு வாழ்த்துரை வழங்குவதில் அகமிக மகிழ்கின்றேன்.

இவர் தென்மராட்சிப் பதியிலே பிறந்து வளர்ந்து கல்வி பயின்று தன் பிரதேசப் பாடசாலையிலேயே அதிபராகப் பணிபுரிந்து ஓய்வுபெறும் பாக்கியம் பெற்றவர். பயிற்றப்பட்ட ஆரம்பக் கல்வி ஆசிரியராக கல்வி பணியினைத் தொடங்கிய இவர் 13 வருடங்கள் ஆசிரியராகவும் 21 வருடங்கள் அதிபராகவும் கல்வித்துறைக்கு ஆற்றிய பணிக்கு இவரது மாணவர்களும், இவரது வழிகாட்டலில் கற்பித்த ஆசிரியர்களும் என்றென்றும் சான்றாய் விளங்குவர். இவர் , கச்சாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் அதிபராகக் கடமை யாற்றிய காலப் பகுதியிலேயே க.பொ.த. உயர்தரத்தில் கலைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டதுடன் 1C பாடசாலையைாகத் தரமுயர்ததப்பட்டு கச்சாய் மகா வித்தியாலயம் எனப் பெயர் மாற்றமும் செய்யப்பட்டது. க.பொ.த. உயர்தரப் பிரிவு ஆரம்பிக்கப்பட்ட உடனேயே மூன்று பாடங்களிலும் அதிசிறப்புச் சித்தியுடன் மாணவர்கள் சித்திடைய்த வழி காட்டியதுடன் பலமாணவர்கள் பல்கலைக் கழக அனுமதியினையும் பெற்றுக் கொள்ள உந்து சக்தியாக விளங்கினார். சிறந்த அதிபருக்கான விருதினை 2005, 2015, 2017 ஆம் ஆண்டுகளில் பெற்று பேருவகையடைந்தார். அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றாலும் சமூகப் பணியினைத் தொடர்ந்து புரியும் வல்லமையை இறைவன் இவருக்கு அருளவேண்டு மென்று பிரார்த்திக்கின்றேன்.

குன்றாத இளமையுடன் மாங்காப் புகழ் பெற்று
எஞ்ஞான்றும் இன்பமுடன் எண்ணியவண்ணம்
குற்றால அருவி போல குடும்பமாய் குதூகலித்து வாழ
குணசீல நாமப் பெருந்தகையை வாழ்த்துகின்றேன்.

**திரு.த. கிருபாகரன்**
**தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர்**

### ஆளுமையின் சிகரம்



எமது வித்தியாலய முதல்வர் உயர் திரு. காசிநாதர் குணசிங்கம் அவர்கள் இப்பாடசாலையின் கல்வி வளர்ச்சியில் மைல்கல்லாக விளங்கியவர். பாடசாலை நிருவாகச் செயற்பாடுகளை நன்கு திட்டமிட்டு உரியநேரம் நிறைவேற்றும் ஆளுமைமிக்க செயல்வீரராவார். மாணவர்கள், ஆசிரியர்களிடையே சிறந்த உறவைக் கட்டியெழுப்பிப் பாடசாலையை ஆரோக்கியமாக பயணிக்கச் செய்வதிலே கண்ணும் கருத்துமாகத் தொழிற்பட்ட சாதனையாளர்.பழைய மாணவர், பெற்றோருடன் சுமுகமான உறவைப் பேணிப் பாடசாலையை வளர்த்தெடுப்பதில் சிரத்தையுடன் தொழிற்பட்டார். இவற்றின் பயனாக இவரது சேவைக்காலத்தில் வித்தியாலய மானது அபரிமிதமான வளர்ச்சியைக் கண்டுள்ளது. யா/ கச்சாய் அ.த.க. பாடசாலையாக விளங்கிய எமது பாடசாலை யா/கச்சாய் மகாவித்தியாலயமாகி 1C பாடசாலையாகத் தரம் உயர்ந்து க.பொ.த. உயர்தரத்தில் கலைப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. அதுமட்டுமன்றி சிறந்த அதிபருக்கான விருதான "குரு பிரதீபா பிரபா" விருதினை மூன்று தடவைகள் பெற்றமை சான்றாதாரமாக அமைகிறது. இத்தகைய ஆளுமையின் சிகரமான எமது அதிபர் அவர்கள் ஓய்வு காலத்தில் உடல் ஆரோக்கியத்துடனும் நீண்ட ஆயுளுடனும் சீரும் சிறப்புமாக வாழ இறையாசியுடன் வாழ்த்துவதில் மகிழ்ச்சியடையகிறேன்.

**திருமதி வி. தேவாசுவ்வரன்**
**பிரதி அதிபர்,யா/கச்சாய் மகா வித்தி.**

### வாழ்த்துச் செய்தி



யா/ கச்சாய் மகாவித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றி 05.01.2023 அன்று மணிவிழாக் காணும் திரு. காசிநாதர் குணசிங்கம் அவர்களின் கல்விச் சேவையைப் பாராட்டுவதுடன் மணிவிழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன். 05.01.1963 இல் பிறந்து தனது ஆரம்பக் கல்வியினை யா/ஓட்டுவெளி அ.மி.த.க. பாடசாலையில் பயின்று கல்வியில் தேர்ச்சியடைந்து இடைநிலை உயர் கல்வியினை யா/ உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் கற்றுத் தேர்ந்திருந்தார். 1988 இல் யா/போக்கட்டி அ.த.க. பாடசாலையில் ஆசிரியராக நியமிக்கப்பட்டிருந்தார். தொடர்ந்து ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் கற்றுத் தேர்ந்திருந்தார். ஆசிரியர் பணியினை சிறப்பாக ஆற்றியிருந்து மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தில் பெரும்பங் காற்றினார். தொடர்ந்து 2001 இல் ஆசிரியராக பணியாற்றிய யா/ போக்கட்டி அ.த.க. பாடசாலையில் அதிபராக நியமனம் பெற்றிருந்தார். அதிபராக கடமையினைப் பொறுப்பேற்று தனது சிறந்த தலைமைத்துவத்தினை வெளிப்படுத்தி பாடசாலையினை முன்னேற்றமடையச் செய்திருந்தார். தொடர்ந்து யா/ நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலயம் யா/ குடமியன் அ.த.க.பாடசாலை யா/ மட்டுவில் சரஸ்வதி வித்தியாலயம், யா/ கொடிகாமம் அரசினர் வித்தியாலயத்திலும் தனது அதிபர் கடமையினை திறம்பட ஆற்றியிருந்தார். தலைமைத்துவத்தின் சிறப்பான செயற்பாடு காரணமாக இறுதியாக தென்மராட்சி கல்வி வலயத்திலுள்ள பிரசித்திபெற்ற பாடசாலைகளில் ஒன்றான யா/ கச்சாய் மகா வித்தியாலயத்திற்கு அதிபராக நியமிக்கப்பட்டு இன்று வரை தனது அதிபர் கடமைகளை ஆற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். அதிபராகக் கடமையாற்றிய காலப்பகுதிகளிலே பாடசாலைகளின் முன்னேற்றத் திற்குப் பெரும் பங்காற்றியதற்கு எடுத்துக்காட்டாக 2005, 2015 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் சிறந்த அதிபருக்கான விருதுகளினைப் பெற்றுள்ளமை சான்றாகும்.கல்வியறிவும் சுயமரியாதை எண்ணமும் பகுத்தறிவுத் தன்மையுமே மனிதனை உயர்த்தும் ஒரு வழி எனக் குறிப்பிடப்படுகின்றது. தனிமனிதர் வாழ்வை இன்பமுடையதாகவும் நன்மையுடையதாகவும் மாற்றி அமைப்பதும் வாழ்வாங்கு வாழ வழி வகுப்பதுமே கல்வி மாணவர்களின் வாழ்விற்கு ஒளியூட்டி அவர்கள் நன்நடத்தையில் சிறந்து விளங்க பெரும் பொறுப்புடன் பணியாற்றி யுள்ளமை பாராட்டுக்குரியது.இவரது சேவையினை பாராட்டி மணிவிழாவிற்கான எனது பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்வதுடன் தனது குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக வாழ எல்லாம் வல்ல இறைவனின் அருட்கடாட்சம் கிடைக்க வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

**திரு.இ. வரதீஸ்வரன்**
**செயலாளர்,**
**கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடமாகாணம்.**

### கோட்டக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி



கல்விப்புலத்திலே ஆசிரியராக அதிபராக பணியாற்றி அகவை அறுபது கண்டு பணிநிலை ஓய்வுபெறும் அதிபர் திருவாளர் காசிநாதர் குணசிங்கம் அவர்களின் பணிநயந்து வாழ்த்துவதில் மன மகிழ்வடைகின்றேன். தென்மராட்சியில் ஆரம்ப பாடசாலைகளில் இருந்து சிரேஷ்ட நிலை பாடசாலைகள்வரை முதல்வர் பதவியை அலங்கரித்து சிறப்பான சேவையுடன் ஓய்வுபெறும் நண்பர் குணசிங்கம் பாராட்டப்படவேண்டியவர். தன்னடக்கமும் தான்கொண்ட கொள்கைப்பற்றுடனும் உயர்நிலை நோக்கி பாடசாலைகளை செயற்படுத்திய கடமையாளன். ஆளணி வளங்களை ஒருங்கிணைத்து கட்டமைக்கப்பட்ட முகாமைத்துவத்தினூடாக தனது சேவையில் வெற்றிகண்டவர். எமது வலயத்தில் சிரேஷ்டநிலையில் இருக்கும் அதிபர்களில் இவரும் ஒருவர் - காலத்தின் கட்டளையின்பேரில் ஓய்வுபெற்றாலும் ஓய்வுகாலம் சீரும் சிறப்புமாக அமைய இறையாசிவேண்டி வாழ்த்துகின்றேன்.

**திரு.வ. நடராசா**
**கோட்டக்கல்விப் பணிப்பாளர், சாவகச்சேரி.**

### வாழ்த்துச்செய்தி



எமது யா/கச்சாய் மகாவித்தியாலய அதிபர் உயர்திரு காசிநாதர் குணசிங்கம் அவர்களின் மணிவிழாவிற்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். எழுதுமட்டு வாழ் கரம்பகத்தில் பிறந்து இன்று மணிவிழாக்காணும் எமது அதிபர் அவர்கள் நற்கல்விகற்று சிறந்த சமூகத்தை உருவாக்கும் ஆசிரியசேவையில் 1988 இல் இணைந்து நாட்டின் பல பகுதிகளில் நல்லாசிரியராக விருதுகள் பெற்று தொடர்ந்து 13 ஆண்டுகள் கல்விச்சேவை யாற்றினார்.அவர்தம் திறனால் 2001 இல் அதிபராக பதவி உயர்வு பெற்று இலங்கை அதிபர் சேவையில் நற்பணியாற்றி சிறந்த அதிபருக்கான வித்தியா விஜயா சிறி சமன,பிரதீபா பிரபா, குரு பிரதீபா பிரபா போன்ற விருதுகள் பல பெற்று தொடர்ந்து 21 ஆண்டுகள் அதிபர் சேவையில் பணிநிறைவுகண்டு மணி விழாக்காணும் எமது அதிபருக்கு எமது இதயம் கனிந்த மணிவிழா வாழ்த்துக்கள். கல்விச் செயற்பாடுகள் முடங்கியிருந்த பெருந்தொற்று இடர்காலத்திலும் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த நிலையிலும் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் தடையின்றி நிகழ்வதற்கும் மாணவர்களை கற்றலில் ஊக்கு விப்பதற்கும் புலம்பெயர் பழையமாணவர் அமைப்புக்களிடமும் நலன்விரும்பிகளிடமும் பின்வரும் உதவி களைப் பெற்று மாணவர்களுக்கு வழங்கினார். பாடப்புத்தகங்கள், கடந்த காலபரீட்சை வினாவிடை தொகுப்புக்கள், மற்றும் கற்றல் உபகரணங்கள், துவிச்சக்கர வண்டிகள், பண உதவிகள், மேலதிக ஊக்கிவிப்பு வகுப்புகள் போன்றவற்றை வழங்கி மாணவர்களை ஊக்கப்படுத்தினார்.அதிபர் அவர்களின் சேவைக் காலத்தில் எமது பாடசாலையில் க.பொ.த. உயர்தரப்பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் அதியுயர் திறமைச் சித்திகளை பெற்றமையும் கடந்த இரண்டு ஆண்டுகளில் 9 மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதி கிடைத்தமையும் பெருமைக்குரிய விடயமாகும். ஓய்வுகாலம் நிறை மனமகிழ்வும் தாழாதகீர்த்தியும் நீள் ஆயுள் ஆரோக்கியத்துடன் வளமுடன் வாழ்வாங்கு வாழ இறையருள் கிடைக்க எமது உளம் நிறைந்த இனிய மணி விழா நல்வாழ்த்துக்கள்.

**கனடா கச்சாய் மகாவித்தியாலய பழையமாணவர் குழு**
**சார்பாக திரு.சந்திரசேகரம் சர்வராஜா (பழையமாணவரும் முன்னாள் ஆசிரியரும்)**

### பழைய மாணவர் சங்க செயலாளரின் வாழ்த்து

கல்விச் சமூகத்திற்கு அரும்பணியாற்றி தனது அறுபதாவது வயதினிலே ஓய்வுபெறும் அதிபர் திரு.கா.குணசிங்கம் அவர்கள் கச்சாய் அ.த.க. பாடசாலையின் அதிபராக 27.10.2014 ஆம் திகதி கடமையேற்றார்.

"சிறப்புவேண்டுமெனில் நல்ல செய்கையும் வேண்டும்"

என்பதற்கிணங்க பாடசாலையின் பெற்றோர்கள் பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், புலம்பெயர் பழைய மாணவர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து வறிய மாணவர்களை பெரும்பான்மையாகக் கொண்ட இப் பாடசாலையின் வளர்ச்சிக்கு வழிகாட்டினார். இதன் பயனாக வெளிநாடுகளில் பழைய மாணவர் சங்கம் உருவாக்கம், பௌதிக வளங்களின் அபிவிருத்தி கற்றல், கற்பித்தல் அபிவிருத்தி என்பன சிறப்பாக நடைபெற்றன.

இப்பாடசாலை மகாவித்தியாலயமாக தரம் உயர்த்தப்படவேண்டும், உயர்தர வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என பல ஆண்டுகள் எடுத்த முயற்சிகள் இவரது காலத்திலேயே நிறைவேறியதுடன் அதிபர் அவர்களின் மகத்தான சேவையினால் பல வறிய மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு தகுதிபெற்றமை அவரது சீரிய பணிக்கு மகுடமாய் அமைகிறது. இத்தகைய அரும்பணிகளை ஆற்றி ஓய்வுபெறும் அதிபர் அவர்களின் ஓய்வுக்காலம் சிறந்தோங்க என் சார்பிலும் பழைய மாணவர்கள் சார்பிலும் வாழ்த்துகின்றேன்.

**திருமதி சியாமளா சிவராசா**
**பழைய மாணவர் சங்க,**
**செயலாளர்.**

### வாழ்த்துச் செய்தி



சைவமும் தமிழும் தழைத்தோங்க மருதமும் நெய்தலும் ஒருங்கே அமையப் பெற்று வளங்கொழிக்கும் தென்மராட்சியின் கச்சாய் எனும் கிராமத்தில் அம்மனின் அருட்கடாட்சத்தினால் எமது வித்தியாலயத்திற்கு முதல்வர்களாக அலங்கரித்தவர்களுள் மகத்தான சேவையாற்றி இன்று மணிவிழாக் காணும் எம் நாயகனின் சேவையினைப் பாராட்டி வாழ்த்துவதில் நாம் உளமார மகிழ்வடைகின்றோம். நாயகன் அவர்கள் தனது சேவைக்காலத்தின் இறுதி ஏழு வருடங்கள் தான் முன்பு பெற்ற இருபத்தேழு ஆண்டுகால அனுபவங்களை எம்மோடிணைந்து உச்ச பயனுடையதாக்கி யா/ கச்சாய் அ.த.க. பாடசாலையினை கச்சாய் மகா வித்தியாலயம் எனும் உயரிய விருட்சமாக்கிய பெருமைக்குரியவர். வேரில் ஊற்றிய நீரை உச்சியில் இனிமையான இள நீராகத்தரும் தென்னை போல் தென்மராட்சியில் தான் பணிபுரிந்த கிராமப்புற மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக அயராது தன்னை அர்ப்பணித்ததன் பயனாக மூன்று தடவைகள் அதிபர் விருதினைப் பெற்ற பெருமைக்குரியவர்.

தான் பெற்ற அறிவு, அனுபவம், ஆளுமை என்பவற்றினை ஒருங்கே இணைத்து எம்மையும், மாணவர்களையும், பெற்றோரையும் சிறந்த நிர்வாகத்திறனோடு வழிப்படுததி புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த (சா /த) பரீட்சை, க.பொ.த.(உ/த) பரீட்சைகள் என்பவற்றில் மாணவர்களைச் சிறப்பான சித்தி பெறச் செய்து நற்பண்புடைய மாணவர்களை உருவாக்க வழிகாட்டியதுடன் குறுகிய காலத்தில் ஒன்பது மாணவர் களை பல்கலைக்கழகம் செல்ல உழைத்தவர் எம் வித்தியாலய முதல்வராவார். உயர்ந்த கம்பீர நடைக்கும், கணீரெனும் அறுத்துறுத்த இனிய குரலிற்கும், நற்பண்பு, நல்லாளுமை என்பவற்றிற்குச் சொந்தக்காரனான எம் மணிவிழா நாயகனை நாம் பாராட்டி வாழ்த்துவதுடன் ஓய்வுக்காலத்தில் தனது குடும்பத்தாருடன் நோய் நொடியின்றி மகிழ்வுடன் நீண்ட நாள்கள் வாழ்ந்து இன்னும் பல சமூக, சமயப் பணிகளை முன்னெடுக்க கச்சாய் அம்மனின் அருட்கடாட்சம் கிடைக்கவேண்டுமென நாம் என்றும் பிரார்த்திக்கின்றோம்.

**திரு.கா.அருட்கரன்**
**தலைவர், ஆசிரியர் நலன்புரி சங்கம்.**

### வாழ்த்துச்செய்தி



வளமும் வரலாற்றுச் சிறப்பும் மிக்க கச்சாய்ப் பிரதேசத்தில் அமைந்துள்ள யா / கச்சாய் மகா வித்தியாலயத்தில் 04.01.2014 இல் துணிச்சலுடன் தனது இறுதிக்காலச் சேவையாகப் பொறுப்பேற்று முகாமைத்துவம் செய்து சிறந்த முறையில் பாடசாலையை வளம்படுத்திய பெருமை மிக்க அதிபராகத் திகழ்ந்துள்ளார்."தோன்றில் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று" எனும் வள்ளுவரின் வாக்கிற்கேற்ப அதிபர் அவர்கள் எங்கெங்கு பணியாற்றினாரோ அங்கெல்லாம் தனது தனி முத்திரையைப் பதித்தார். தான் பதவியால் பெருமை பெற்றதை விட தான் வகித்த முதல்வர் பதவிக்குப் பெருமை சேர்த்துள்ளார். உயர்ந்த உள்ளம் உடையவர் அகவை அறுபதிலும் "நிமிர்ந்த நன்னடையாளனாக" அனைவரது உள்ளங்களிலும் இடம் பிடித்துள்ளார்.தன்னாலான நற்பணிகள் பலவற்றை ஆற்றி 04.01.2023 அன்று ஓய்வு நிலையை அடையவுள்ள அதிபர் அவர்களுக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன். சீரும் சிறப்புடன் உடல் நலத்துடன் நீடூழி வாழ மன நிறைவுடன் வாழ்த்துகிறேன்.

**திருமதி ம. பிரபாகரன்**
**செயலாளர்,**
**பாடசாலை அபிவிருத்திக் குழு**

### பதவி ஓய்வு வாழ்த்து மடல்



ஓய்வு பெறப்போகும் எமதருமை ஆசான் உயர் திரு.குணசிங்கம் அவர்களுக்கு லண்டன் கச்சாய் பழைய மாணவர் ஒன்றியத்தின் தலைவர் என்ற முறையில் என் சார்பில் ஒரு சில வரிகள் வடிப்பதில் பெருமையடைகின்றேன். கடந்த காலங்களில் அதிபர் அவர்களோடு எமது நிர்வாகம் இரண்டறக்கலந்து நின்று பணியாற்றியமை என்பது வரலாற்றுச்சிறப்பாகும். இந்த நற்பணியின் விளைச்சல் தான் இன்று பாடசாலை மூங்கில் மரம் போல் முகில் தொட்டு நிற்கின்றது. அதிபர் மதிப்பிற்குரிய உயர் திரு.குணசிங்கம் அவர்களை எமது பாடசாலைக்கு அழைத்துவந்ததில் தம்பி சிவலிங்கம் மற்றும் அண்ணன் சோதிநாதன் அவர்களுக்கும் அளப்பரிய பங்குண்டு. அந்த வகையில் அவர்களுக்கும் இவ்விடத்தில் நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன். இனி அதிபர் உயர்திரு. குணசிங்கம் அவர்களின் சேவைக்காலத்தில் எமது பாடசாலை அடைந்த சாதனைகள் மற்றும் கண்ட வெற்றிகள் எண்ணிலடங்காதவற்றுள் ஒரு சிலவற்றை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். குறிப்பாக பாடசாலை தரமுயரத்தப்[illegible] மட்டுமல்லாமல் உயர்தரத்தில் முதல் முயற்சியிலேயே 4 மாணவர்களை சித்தியடையச் செய்து பல்கலைக்கழகம் வரை அனுப்பி அழகு பார்த்தமை எமது பாடசாலை வரலாற்றிலேயே ஒரு தவிர்க்க முடியாத சரித்திர நிகழ்வாகும். அடுத்தபடியாக கடந்த காலங்களில் எமது பிரதேச மாணவர்கள் எமது பிரதேசம் கடந்து வேறு பிரதேசங்களுக்கு கல்வி தேடிச்செல்லும் வழமையே இருந்தது அந்த வழக்கத்தை மாற்றி எமது பாடசாலையை பெருமை மிகுந்த ஒன்றாக மாற்றி மாணவர்கள் எண்ணிக்கையை உயர்த்தியமை மற்றும் எமது பாடசாலையின் அகப்புற வெளிப்புற கட்டமைப்புக்களின் வளர்ச்சியில் அக்கறையாக செயற்பட்டமை போன்றவற்றை குறிப்பிடலாம். அத்துடன் எமது வெளியுலகத்தொடர்பாளர் அண்ணன் திரு.துரைசிங்கம் அவர்களோடு உறுதுணையாக நின்று பாடசாலை வளர்ச்சிப்படிகளுக்கு வழிசமைத்தமை என இன்னும் இன்னும் எவ்வளவோ விடயங்களை அடுக்கிக்கொண்டே போகலாம். எனவே ஓய்வுபெற்றுச்செல்லும் அதிபர் அவர்கள் நோய் நொடிகள் இன்றி, நீண்ட ஆயுளோடு, தனது குடும்பத்தாருடன் ஓய்வுகாலத்தை கழிக்க எல்லாம் வல்ல கச்சாய் கண்ணகை அம்மனை பிரார்த்திக்கின்றேன்.

**திரு. சதாசிவம் சற்குணநாதன்.**
**தலைவர்.**
**கச்சாய் பழைய மாணவர் ஒன்றியம்,**

**கல்லூரிச் சமூகம்**
**யா/ கச்சாய்**
**மகா வித்தியாலயம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளூராட்சித்...

ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுடன் நேற்று நடைபெற்ற விசேட கலந்துரையாடலின்போது ஜனாதிபதி இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார் என அறிய முடிந்தது.

"பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்பதற்கே எனக்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது. எனவே, ஈராண்டுகளில் அதற்கே முன்னுரிமை, முக்கியத்துவம் வழங்குவேன்" - என்று ஜனாதிபதி இந்தக் கலந்துரையாடலில் குறிப்பிட்டுள்ளார். (அ-எ-44)

## இனப்பிரச்சினைக்கான...

இவ்வாறு முன்னாள் பிரதமரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மஹிந்த ராஜபக்ச, கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனிடம் தெரிவித்தார்.

மஹிந்த ராஜபக்ச, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை நேற்று மாலை அவரது கொழும்பு இல்லத்துக்குச் சென்று சந்தித்துக் கலந்துரையாடினார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியல் தீர்வுக்கான காலக்கெடு விதித்து நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றார். அவ்வாறு முன்னெடுக்கப்படும் தீர்வு முயற்சிகள் தொடர்பில் மஹிந்தவும், அவரது கட்சியும் ஆதரவளிக்கவேண்டுமென இரா. சம்பந்தன் கோரிக்கை விடுத்தபோது, மஹிந்த ராஜபக்ச மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

'தமிழ் மக்களுக்கு தீர்வு வழங்கக்கூடாது என்ற நிலைப்பாட்டில் நாம் இல்லை. எமது ஆட்சிக் காலத்தில் தமிழ் மக்களின் அரசியல் தீர்வுக்காகப் பல சுற்றுப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டன. பல்வேறு காரணங்களால் இறுதி இலக்கை எட்ட முடியாது போனது. நாம் தமிழ் மக்களுக்குத் தீர்வை வழங்கவேண்டும் என்ற எண்ணப்பாட்டிலேயே நாம் எப்போதும் இருக்கின்றோம். எமது ஆட்சிக் காலத்தில் 81 தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் முன்னெடுக்கப்படும் முயற்சிகளை வரவேற்கின்றோம். எனினும் தற்போது தயாரிக்கப்படும் தீர்வுக்கான வரைவு எமக்கு இன்னமும் கிடைக்கவில்லை. அது கிடைத்தவுடன் நாம் அது தொடர்பில் சாதகமாகப் பரிசீலிப்போம். ஆனால், தீர்வு விடயத்தில் நாம் கடும் போக்குடன் நடந்து கொள்ளப்போவதில்லை. பெரும்பான்மை மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவும், தமிழ் மக்களுக்கு ஏற்புடையதாகவும் தீர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும். அடுத்த வாரம் 3 நாள்கள் நடைபெறவுள்ள அனைத்துக் கட்சிக் கலந்துரையாடலில் எமது கட்சியான சிறிலங்கா பொதுஜன பெரமுனவும் கலந்துகொள்ளும். தீர்வு தொடர்பான முன்மொழிவுகளைச் சாதகமான முறையில் ஆய்வு செய்யும் என்று மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் தரப்பும் விட்டுக் கொடுப்புடனே தீர்வு முயற்சிகளை அணுகுகின்றது என்று இரா.சம்பந்தன் சந்திப்பில் சுட்டிக்காட்டியுள்ளார்.

'தமிழர் தரப்பு தனி நாடு கோரவில்லை. பிரிக்கப்படாத இலங்கைக்கு சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வையே தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர். தற்போது முன்னெடுக்கப்படும் தீர்வு முயற்சி வெற்றிபெற்றால், தமிழருக்கு மட்டுமல்லாது முழு நாட்டுக்கும் பயனுள்ளதாக இருக்கும். அரசியல் தீர்வு ஒன்று ஏற்படும் பட்சத்தில் புலம்பெயர் நாடுகளில் உள்ள தமிழ் மக்கள் இலங்கையில் முதலீடுகளைச் செய்வதற்கு ஆயத்தமாகவே இருக்கின்றனர். நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு தமிழ் மக்கள் தரப்பில் இருந்து காத்திரமான பங்களிப்புக் கிடைக்கும் என்றும் இரா.சம்பந்தன் இதன்போது குறிப்பிட்டார்.

மஹிந்த ராஜபக்சவும், இரா.சம்பந்தனும் தீர்வு முயற்சிகள் தொடர்பில் பரஸ்பரம் கருத்துப் பரிமாற்றங்களை சாதகமான முறையில் பகிர்ந்துகொண்டனர். தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்துடன் கலந்துரையாடி சுமுகமான தீர்வை எட்ட முயற்சிப்பேன் என்று தெரிவித்த மஹிந்த ராஜபக்ச, இரா.சம்பந்தனுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிப்பும் செய்தார். (அ-எ)

## கைதி...

முல்லைத்தீவு, மாவில்வத்தைகண்டியைச் சேர்ந்த இ.சேகர் (வயது-62) என்பவரே உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவில் நடந்த குற்றச் சம்பவம் ஒன்று தொடர்பில் இவர் 2020 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். இவருக்கு சுகவீனம் ஏற்பட்ட நிலையில் வவுனியா பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். எனினும் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்துள்ளார். (அ-எ-110)

## உள்ளூராட்சி...

340 உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்பு மனுக்கள் கோரும் அறிவித்தல் நேற்று மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்கள் ஊடாக வெளியிடப்பட்டுள்ளன. இந்த அறிவிப்பில் வேட்பு மனுக்கள் ஏற்கப்படும் திகதி, இடம், பத்திரங்கள், வேட்பாளர்கள், பெண் பிரதிநிதித்துவம் போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் எதிர்வரும் 21 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். எதிர்வரும் 20 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை கட்டுப்பணத்தைச் செலுத்த முடியும் என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

அதேவேளை, உள்ளூராட்சி மன்றங்களுக்கான உறுப்பினர்கள் எதிர்வரும் மார்ச் மாதம் 20 ஆம் திகதிக்குள் நியமிக்கப்படவேண்டும். அதற்கான தேர்தல் எதிர்வரும் மார்ச் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் நடைபெறவேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்தது. (அ-எ)

## கிணற்றில்...

ஓய்வுநிலை அதிபரான சு.தர்மலிங்கம் (வயது-69) என்பவரே உயிரிழந்தவராவார். இவரது சடலம் மீட்கப்பட்டு சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான விசாரணைகள் கொடிகாமம் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (அ-எ-9)

## சமரத்துக்கு...

இரண்டாவது தடவையாக வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னதாக மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் பதவியில் இருந்து விலகியிருந்தார்.

யாழ். மாநகரசபைக்குப் புதிய முதல்வர் ஒருவரைத் தெரிவு செய்வது தொடர்பில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் சட்டமா அதிபரின் ஆலோசனையைக் கோரியிருக்கும் நிலையில், புதிய முதல்வர் தெரிவு இடம்பெற்றால் நீதிமன்றத்தை நாடுவோம் என்று முன்னாள் முதல்வர் வி.மணிவண்ணன் தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில், உறுப்பினர்களிடையே சமரச முயற்சி ஒன்றை மேற்கொண்டு சபையின் எஞ்சிய காலத்தைக் கொண்டு நடத்தும் நோக்குடன் வடக்கு மாகாண ஆளுநர் மாநகரசபை உறுப்பினர்களுடன் சந்திப்பொன்றுக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

முன்னாள் முதல்வரின் போக்கைக் கண்டிக்காமல், மீண்டும் சமரசத்துக்கு முனையும் ஆளுநரின் போக்குக்குச் சம்மதிக்கப்போவதில்லை என்றும், அந்தக் கூட்டத்துக்கு சமுகமளிக்கப் போவதில்லை என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாநகரசபை உறுப்பினர்கள் தெரிவித்தனர். (எ-5)

## கூட்டமைப்பு...

கடந்தமுறை தமிழ் கட்சிகளுக்கும் ஜனாதிபதிக்கும் இடையே நடைபெற்ற சந்திப்பில் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்ளவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஊடாக சந்திப்பு ஏற்பாடுகளை ஜனாதிபதி மேற்கொண்டிருந்தார். அதனால் விமர்சனங்களும் எழுந்திருந்தன.

நாளைய சந்திப்புக்கான ஏற்பாடுகள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நேரடியாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. இரா.சம்பந்தன், த.சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரை நேற்று மாலை தொலைபேசியில் தொடர்பு கொண்ட ரணில் விக்கிரமசிங்க, சந்திப்புக்கு அழைப்பு விடுத்துள்ளார். (அ-எ)

## திட்டங்கள்...

நிதி ஒதுக்கப்பட்டு வழங்கப்பட்டு வந்தது. இது இறுதி ஆண்டாகும்.

இறுதி 3 ஆண்டுகளும் வடக்கின் ஒவ்வொரு மாவட்டத்தினதும் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களங்களுக்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்படும் என்பதும், அந்த நிதியில் எத்தகைய திட்டங்கள் முன்னெடுக்க வேண்டும் என்பது தொடர்பிலும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டு அதற்குரிய வகையில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்தன.

ஆனால், திடீரென வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரால், ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் உரிய நிதி வெட்டிக் குறைக்கப்பட்டு வவுனியா மாவட்டத்தில் அமைக்கப்பட்டுவரும் விபத்து அவசர சிகிச்சைப் பிரிவுக்கு 645 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. குறித்த சிகிச்சைப் பிரிவுக்குரிய நிதியை கொழும்பு அரசு விடுவிப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ள நிலையில், உலக வங்கியின் திட்டத்திலிருந்து நிதி வெட்டி ஒதுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு 425 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்த நிலையில் அது 276 மில்லியன் ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்துக்கு 210 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்த நிலையில் அது 100 மில்லியன் ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது. மன்னார் மாவட்டத்துக்கு 270 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்த நிலையில் 147 மில்லியன் ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 250 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்த நிலையில் 118 மில்லியன் ரூபாவாக அது குறைக்கப்பட்டுள்ளது. வவுனியா மாவட்டத்துக்கு 250 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்த நிலையில் 118 மில்லியன் ரூபாவாக அது குறைக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்துக்கு 30 மில்லியன் ரூபாவும், சுகாதார அமைச்சுக்கு 9 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டிருந்த நிலையில் அவற்றில் எந்தவொரு வெட்டிக் குறைப்பும் மேற்கொள்ளப்படவில்லை. இந்த ஆண்டுக்குரிய திட்டங்கள் யாவும் செப்ரெம்பர் மாதத்துக்கு முன்னர் நிறைவேற்றப்படவேண்டும். அவ்வாறு திட்டங்களை நிறைவேற்ற முடியாவிட்டால், நிதி திரும்பிச் செல்லும் அபாயம் காணப்படுகின்றது.

வவுனியா மாவட்டத்தில் விபத்து அவசர சிகிச்சைப் பிரிவுக்கு 645 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் அதனை 9 மாத காலப் பகுதிக்குள் நிறைவேற்றி முடிப்பது கடினம் என்று வடக்கு மாகாண பிரதம செயலரால் கூட, சுகாதாரப் பணிப்பாளருக்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஆனாலும், இராணுவத்தினரைப் பயன்படுத்தி வேலைகள் அனைத்தையும் குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் நிறைவேற்றி முடிப்பேன் என்று சுகாதாரப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (அ-ஓ-5)

## அரசியல்...

ரணில் விக்கிரமசிங்க விளக்கமளித்துள்ளார். ஐ.நா.வின் உதவிப் பொதுச் செயலாளர் கன்னி விக்னராஜா உள்ளிட்ட பிரதிநிதிகள் குழுவினர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

நாட்டில் நிலவும் பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவதற்கு ஜனாதிபதி தலைமையிலான அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளைப் பாராட்டிய உதவிப் பொதுச் செயலாளர், ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் இலங்கைக்கு வழங்கப்படும் உதவிகள் தொடரும் என்று உறுதியளித்தார்.

இலங்கையின் புதிய பொருளாதார சீர்திருத்தங்கள் தொடர்பாக விசேடமாக கலந்துரையாடப்பட்டதுடன், இலங்கைக்கு நீண்டகால அடிப்படையில் முன்னேறுவதற்கும் நாட்டின் எதிர்காலப் பயணத்தை உறுதி செய்வதற்கும் கடினமான தீர்மானங்களை எடுக்கவேண்டியிருக்கும் என்பதை உதவிப் பொதுச் செயலாளர் உள்ளிட்ட தூதுக்குழு ஏற்றுக்கொண்டது.

நாடாளுமன்ற அரசமைப்பு சபையை உருவாக்குதல் போன்ற நாட்டின் அரசியல் சீர்திருத்தங்கள் மற்றும் இனப் பிரச்சினைக்கான தீர்வு காண்பது தொடர்பாக ஏனைய அரசியல் கட்சிகளுடன் நடத்தும் கலந்துரையாடல் என்பன தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதிநிதிக் குழுவுக்கு விளக்கமளித்தார். தூதுக்குழு அந்த நடவடிக்கைகள் தொடர்பில் தமது பாராட்டுகளைத் தெரிவித்தது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்தது.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் சர்வதேச உறவுகள் தொடர்பான பணிப்பாளர் தினுக் கொலம்பகே உட்படப் பலர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர். (அ-எ-44-22)

## வயோதிபத்...

வீட்டில் வயோதிபத் தம்பதி வசித்து வந்த நிலையில், வீட்டுக்குள் புகுந்தவர்கள் அவர்களைத் தாக்கி 5 பவுண் நகைகள் மற்றும் 50 ஆயிரம் ரூபா பணம் என்பவற்றைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

கொள்ளையர்களின் தாக்குதலுக்கு இலக்கான வயோதிபரான செல்லப்பா அழகையா காயங்களுடன் ஒட்டுசுட்டான் மருததுவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தக் கொள்ளைச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை ஒட்டுசுட்டான் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ-எ-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16ஆம் பெனடிக்கின் ஆன்மா இளைப்பாற்றித் திருப்பலி

## யாழ். மறைமாவட்டத்தில் ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜன.5

முன்னாள் பாப்பரசர் 16ஆம் பெனடிக்கின் அடக்கச் சடங்குத் திருப்பலி இன்று வத்திக்கான் புனித பேதுருவானவர் பேராலயத்தில் நடைபெறவுள்ள நிலையில், யாழ்ப்பாணம் மறைமாவட்ட பங்கு திரு அவை ஆலயங்களிலும், மடங்களிலும் நிறுவனங்களிலும் வசதியான நேரத்தில் ஆன்ம இளைப்பாற்றித் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும் என்று யாழ்ப்பாணம் மறை மாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் தெரிவித்தார்.

ஆலயங்களிலும் மடங்களிலும் மற்றும் நிறுவனங்களிலும் அரைக்கம்பத்தில் திருத்தந்தையின் கொடியை ஏற்றி, இறுதிச் சடங்குகள் வத்திக்கான் நேரம் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும் போது இலங்கை நேரம் பிற்பகல் 2 மணிக்கு ஆலயங்களில் துக்க மணி ஒலித்து அஞ்சலி செலுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## விபத்தில்...

வெற்றிலைக்கேணியில் நடந்த மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்த யோ.பிரகலாதன் (வயது-42) என்பவரே உயிரிழந்துள்ளார். இவர் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தில் சிறு கைத்தொழில் பிரிவு உத்தியோகத்தராவார்.

இவர் பயணித்த மோட்டார் சைக்கிளும், மற்றொரு மோட்டார் சைக்கிளும் மோதி இந்த விபத்து சம்பவித்திருந்தது. விபத்தில் மோட்டார் சைக்கிள்களைச் செலுத்தி வந்த இருவரும் காயமடைந்தனர். விபத்தில் படுகாயமடைந்திருந்த பிரகலாதன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். சிகிச்சை பயனின்றி நேற்றுமுன்தினம் இரவு அவர் உயிரிழந்தார். (அ-எ-113-66)


**பெண் வேலையாள்கள் தேவை**

யாழ். நகரில் இயங்கும் புடைவைக் கடைக்கு அனுபவமுள்ள பெண் வேலையாள்கள் தேவை. (CS 48453) (3/6)

J.P.P Tex
308, K.K.S. Road, Jaffna.
077 735 8035

**மணமகன் தேவை**

கனடாவில் குடியுரிமை பெற்ற 1990 இல் பிறந்த ரிஷபராசி ரோகினி நட்சத்திரமுடைய மணமகளுக்கு உள்நாட்டில் மணமகன் தேவை.

தொடர்பு: 077 427 1512

**A/L வரலாறு**

**மாபெரும் கருத்தரங்கு**

வளவாளர்:
M.பத்மன் B.A (Hons) History
Sp.M.A (History) P.G.D, M.E.D (r)_
இடம்:- DMI (யாழ்ப்பாணம்)
காலம்:- 06.01.2023 (வெள்ளிக்கிழமை)
07.01.2023 (சனிக்கிழமை)
நேரம்:- காலை 8.00 A.M-5.00 P.M

077 4825 587

**Bar Keeper தேவை**

யாழ். மத்தியில் அமைந்துள்ள Hotel ஒன்றுக்கு Restaurant & Bar இல் வேலை செய்வதற்கு அனுபவமுள்ள Bar Keeper தேவை.

தொடர்பு: 077 6341 525

**ஆண்டு ஒன்று ஆகிவிட்டது**



தோற்றம் 20 . 07 . 1954
மறைவு 05 . 01 . 2022

அமரர்
**இராமலிங்கம் யோகராசா (யோகன்)**

உங்கள் பிரிவை தாங்காது
வாயடைத்து நிற்கின்றோம்
ஆறுதல் சொல்வதற்கு
யாருள்ளார் எமக்கு என்று
பாறிப்போய் கிடக்கின்றனர்!
பார் ஐயா உன் உறவுகளும்
உற்றாரும் மற்றாரும் தம்
உணர்விழந்து தவிக்கின்றனர்
சிந்துகின்ற நம் கண்ணீர்
சிறிதளவும் போதாதென்று
வானமும் இருள் சூழ்கின்றது
மழை பொழியவா......

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மனைவி, மகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கோயிலாக்கண்டி பகுதியில்
24 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- A32 பிரதான வீதியில் இருந்து 600M தூரம்
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- A32 பிரதான வீதியில் இருந்து இருவழிப் பாதைகள் உள்ளன.
- நெய்தல் பீச்சுக்கு (Beach) அருகாமையில் உள்ளது.
- கோயிலாக்கண்டியில் இருந்து யாழ். நகரத்திற்கும், சாவகச்சேரி நகரத்திற்கும் அரச, தனியார் பஸ் போக்குவரத்து சேவை உள்ளது.
- இக் காணியின் தெற்கு எல்லை கடற்கரை (பீச்) நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல் (கட்டுக் கிணறும் உள்ளது) ஒரு பரப்பின் விலை 675000 ரூபாய் மட்டுமே.
- பார்வையிடும் நேரம்:- காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை.

தொடர்பு:- ஜெயம் 077 8147 389
077 9865 457

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில்
10 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன். 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும், 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- பெரிய நாகதம்பிரான் கோயிலுக்கு அருகாமையில் உள்ளது.
- A-9 பிரதான வீதியில் இருந்து 700 M தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 62 உள்ளன.
- குடிதண்ணீர் கட்டுக் கிணற்றுடன் சிறிய வீடும் உள்ளது.
- நீர் பாய்ச்சும் வசதிகள் உள்ளன. (பைப் லைனிங்)
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
- பார்வையிடும் நேரம் : காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை

தொடர்பு:- ஜெயம் 077 24 17 589
077 02 67 619

**மரண அறிவித்தல்**



மலர்வு 29 . 04 . 1948
உதிர்வு 01 . 01 . 2023

**கணபதி நாகேந்திரன்**

(உரிமையாளர் - சக்தி உணவகம், சுன்னாகம்)

கைதடி மத்தியைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் (6ஆம் கட்டை K.K.S. Road ) வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி நாகேந்திரன் (ஓய்வுபெற்ற பாடசாலை அலுவலகப் பணியாளர்) கடந்த (01.01.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதி - சீதேவி தம்பதிகளின் அன்பு மகனும், இணையப்பா - நாகம்மா (ஐயனார் கோவிலடி, மல்லாகம்) தம்பதிகளின் அன்பு மருமகனும், அகிலேஸ்வரி (சின்னமணி)யின் அன்புக் கணவரும், சின்னம்மா, காலஞ்சென்ற சிவ்தாசன், குகதாசன், நாகம்மா, மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுரேஸ்குமார் (அமெரிக்கா), காலஞ்சென்ற சுபதர்சன் (வவி), சுபதர்சினி, சுதர்சன் (லண்டன்), அருள்குமார் (வவுனியா தொழில் திணைக்களம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற புவனேஸ்வரன், கௌரி அன்னபூரணி, பரமசாமி, ரவீந்திரன், நீலாவதி ஆகியோரின் மைத்துனரும், கமலவாணி (அமெரிக்கா), நிரூபா (U.K), லம்போதினி ஆகியோரின் அன்பு மாமனாரும், மாதங்கி (அமெரிக்கா), சயீதீபன் (அமெரிக்கா), லக்ஷிகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.01.2023) வியாழக்கிழமை காலை 8.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.30 மணிக்கு சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

6ஆம் கட்டை,
K.K.S. Road.
(பழைய பொலிஸ் நிலைய முன்)
சுன்னாகம் (CS/22728)

தகவல் :
குடும்பத்தினர்.




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.01.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org